சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, மாசி 26 உ. (10-3-74) ஞாயிறு மார்ச் 10 லபர் 15 -புத்தகம் 27 இதழ்-28

# புத்தூர் சட்ட மறுப்பு பூரண வெற்றி!

### தமிழர் கூட்டணியின் ஓராண்டு போராட்டத்தால் கிடைத்த பயன்!

தாய் மொழியே தமிழ்ப் பிள்ளைகளின் கட்டாய போதன மொழியெனும் உரிமையை நிலை நாட்டும் பொருட்டு தமிழர் கூட்டணி கடந்த ஓராண்டாக புத்தூரில் நடத்தி வந்த சட்ட மறுப்பு இயக்கம் இப்போது வெற்றியடைந்துள்ளது.

புத்தூரிலுள்ள பௌத்த சிங்கள பாடசாலையில் இங்களத்தை போதன மொழியாக ஏற்கமறுத்து அப்பாடசாலையிலிருந்து வெளியேறி, தமிழர் கூட்டணியினால்

(8-ம் பக்கம் பார்க்க)

## பசித்தவயிறுகளிலும் மேலோங்கி நிற்பது பைந்தமிழ் உணர்ச்சியே!

"However, that the Federal party candidate scored a close hit with 12,889 points to the fact that even on empty stomachs, language is still a predominating factor in Tamil areas."

—SUN - EDITORIAL (2-3-74)

"எப்படியிருப்பினும், தமிழரசுக் கட்சி வேட்பாளர் 12,889 வாக்குகள் பெற்று, நெருக்கமான அடி கொடுத்திருப்பது — தமிழ் பிரதேசங்களைப் பொறுத்தவரை காய்ந்த வயிறுகளிலும்கூட மொழியே இன்றும் முக்கிய இடத்தை வகித்துவருகிறது என்கிற உண்மையை எடுத்துக்காட்டுகிறது."

'சன்'—ஆசிரியர் தலையங்கம் (2.3.74)

# "முதலாளித்துவ பிற்போக்கு" வெற்றிகண்டு "சோசலிசங்கள்" கும்மாளம் கொட்டுவதேன்?"

'மன்னார் இடைத்தேர்தலில் தமது கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்திப் போட்டியிடவே தைரியமின்றி முதுகெலும்பற்று ஓடி ஒளிந்திருந்த ஆளும் கட்சியினர், தேர்தலில் யூ. என்; பி. வெற்றி பெற்றவுடன், ஏதோ அதைத் தமது சொந்த வெற்றிபோல எண்ணிக்கொக்கரித்துத் திரிவதேன்? யூ என் பி.யை பிற்போக்கு சக்தியென்றும், முதலாளித்துவ, தேசவிரோதக் கட்சியென்றும் தெற்கில் கூறிவரும் குமாரசூரியர் கும்பல், வடக்கில் அற்பவாக்குகளால் அதே 'பிற்போக்கு முதலாளித்துவ தேசவிரோதக் கட்சி'யான யூ. என். பி; வெற்றிபெற்றதும், அதை 'தேசியக் கட்சி' யென்று ஆரத்தழுவி முத்தமிடுவதேன்? தெற்கில் முதலாளித்துவம்; பிற்போக்குவாதிகள் என்று கூறப்பட்ட கட்சி, வடக்கில் மட்டும் 'தேசிய' சக்தியாக எப்படி மாறியது?

'யூ. என்; பி. யின் வெற்றி தமிழ்ப்பகுதியில் இனவாதத்திற்கு இடமில்லை யென்பதையும், தேசியக் கட்சிக்கே இடமுண்டு என்பதையும் பறைசாற்றிவிட்டதாக ஆளும் கட்சியினர் கொக்கரிக்கிறார்கள். ஆனல் யூ. என். பி. யைப்பற்றி இவர்கள் இதுவரை கூறியதெல்லாம் என்ன? யூ. என். பி.தான் 1958ம் ஆண்டு இனக் கலவரத்திற்கு காரணமானதென்றும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உருவான பண்டா—செல்வா ஒப்பந்தத்தைஎதிர்த்தழித்தவர்களும் யூ. என். பி.யினர் தாம் என்றும் குற்றம் சுமத்தித் திரிந்தார்களே! அத்தகைய தமிழர் விரோதக் கட்சியான யூ. என். பி. எப்படி இப்போது மட்டும் 'தேசிய' கட்சியாகிவிட்டது இவர்களுக்கு?

'இதிலிருந்து தெரிவது ஒன்றே ஒன்றுதான். தமிழ் மக்களின் தனித்துவத்தையும் உரிமையுணர்வையும் நசுக்குவதற்கு— மட்டம் தட்டுவதற்கு—கெடுப்பதற்கு— வாய்ப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் சிங்களக் கட்சிகள் சோசலிசத்தையும், முதலாளித்துவத்தையும் ஒத்திவைத்துவிட்டு ஒன்றுடன் ஒன்று கொஞ்சிக் குலவ முற்பட்டு விடுகின்றன. இந்த உண்மையை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.'

—இவ்வாறு தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

## பொய்யைச் சொன்னாலும்...!

"தமிழர் கூட்டணியைச் சேர்ந்த எம். பி.க்கள் விவசாய அபிவிருத்தி பற்றியும் விவசாயிகளின் குறைகள் பற்றியும் எம்மிடம் ஒன்றும் கேட்பதில்லை."

—வேலணையில் ஊர்காவற்றுறைத்தொகுதிக்கான விவசாயத்திட்ட அலுவலகத் திறப்பு விழாவில் காணி அமைச்சர் கொப்பேகடுவ (ஈழநாடு 4-3-74)

"ஊர்காவற்றுறை எம். பி. என்னை இங்கு வரவேற்கவரவில்லை. பலமுறை இத்திட்ட அலுவலகத்தை (விவசாய அலுவலகம்) திறக்கும்படி கேட்டிருந்தார்."

—அதே கூட்டத்தில் கொப்பேகடுவ (ஈழநாடு 4-3-74)

## இலங்கை அரசின் நியாயமற்ற செயல்!

"இலங்கை எப்போதும் ஆள்பலம் குறைந்த நாடு. தனது பொருளாதார வளர்ச்சிக்கு அங்கே குடியேறியுள்ள தமிழர்களின் உதவி மிகவும் அவசியம். அங்குள்ள தமிழர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முழுமனத்துடன் உழைத்துவருபவர்கள். தாயகத்துடன் தொடர்பு விட்டுப்போனவர்கள். அவர்களால் இலங்கைக்கு எவ்விதத்திலும் லாபமே. மாறாக, இந்தியாவோ ஜனத்தொகை மிகுதியாக உள்ள நாடு. இலங்கை வாழ்இந்தியர்கள் இங்கு வராமலிருந்தால் ஒன்றும் குறை ஏற்படாது. இந்த நிலையில், நியாயமாக இலங்கையிலேயே வசிக்க மனுச் செய்து கொண்டுள்ள ஆறு லட்சம் பேர்களை அங்கேயே நிலைக்கச் செய்யாமல், நிர்ப்பந்தமாக வெளியேற்ற முற்படுவதுதான் நியாயமற்ற நிலையாகும்."

—கல்கி ஆசிரியத் தலையங்கம் (10.2.74)

### சென்னையில் செல்வா பிறந்த நாள் விழா!

ஈழத்தமிழர் தந்தை செல்வா அவர்களின் 76வது பிறந்த நாள் விழா சென்னை பெரியார்திடலில் 31.3.74ல் விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

## சகுனி ஆடிய சூது!

தருமருடன் சூதாட விரும்பிய துரியோதனன் ஒரு சூழ்ச்சி செய்தான். என்னவெனில் அவன் தானாக முன்வந்து சூதாடவில்லை. தனது சார்பில் சூழ்ச்சியின் இருப்பிடமான மாமன் சகுனியையே தருமருடன் சூதாட வைத்தான்; சகுனியின் சூழ்ச்சி மிகு ஆட்டத்தால் தருமர் தோல்வியுற்றார். இது பாரதக்கதை;

இதுபோலவே மன்னார்த் தேர்தலிலும் சிறிமா அம்மையாரின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் குதிக்கவில்லை; குதிக்கத் துணியவுமில்லை. அது சவாலை மட்டும் விடுத்தது. அதன்பின் சூழ்ச்சியில் கைதேர்ந்த ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியே தமிழர் கூட்டணியுடன் போட்டியிட விடப்பட்டது. இதன் வஞ்சகச் சூதினால்—பணத்தின் பலத்தினால்—கிடைத்த வெற்றியை ஆளும் கட்சி தான் ஆடிப்பெற்ற அமோக வெற்றியெனக்கொள்வது நெறியாகாது, அறமாகாது. இதை நாடறியட்டும். உலகறியட்டும்! ஆளும் கட்சியும் அதன் அடிவருடிகளும் உணரட்டும்!

# பௌத்த ஆதிக்கம் வடக்கில் இறங்குகிறது!

வரலாற்றுச் சிறப்பும் தேவாரப்பாடலும் பெற்றதும் உலகமடங்கிலுமுள்ள இந்துக்களின் பெருமைக்குரிய வழிபாட்டு தலமுமாகிய திருக்கோணேச்சரத்தை புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்தும்படி இந்நாட்டு இந்துக்கள் அனைவரும் ஒரே குரலில் கடந்த பல்லாண்டுகளாக கோரி வருகிறார்கள்.

அது சிங்கள அரசின் செவிகளில் விழவில்லை!

திருக்கோணேச்சரம் போன்ற சிறப்புபெற்ற திருக்கேதீச்சரத்தையும் புனித பிரதேசமாக்கும்படி கோரி வருகிறார்கள் — அதுவும் விழவில்லை.

ஆனல் இந்துக்களைப் பெரும்பான்மை யோராகக் கொண்ட யாழ் குடாநாட்டில் பௌத்த மத வளர்ச்சியில் மட்டும் அரசு தீவிர அக்கறை காட்டிவருகிறது!

ஐந்து இலட்சம் ரூபாசெலவில் யாழ் நாகவிகாரைக்கு அணித்தாக பௌத்த யாத்திரிகர் விடுதி ஒன்றைக் கட்டவிருக்கிறது கலாசார அமைச்சு. இத்தப்பணத்தில் ஒரு பகுதி பொது மக்களிடமிருந்து அறவிடப்படுமாம். மீதி மக்களின் வரிப்பணத்திலேயே கொட்டிச் செலவிடப்படவுள்ளது.

இப்போது மற்றோர் செய்தி!

இலங்கைக்கு பௌத்த மதத்தைக்கொண்டு வந்து சேர்த்த சங்கமித்தை, அரசமரத்துடன் வந்திறங்கிய

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆபீஸ் பையன் கேட்கிறன்!

"வடபகுதியில் உள்ள மக்களுக்கு உணவுப்பிரச்சினையே கிடையாது என்றும், இந்த "நல்ல செய்தியை" கொழும்பு சென்றதும் பிரதமருக்கு தெரிவிக்கப் போவதாகவும் காணி விவசாய அமைச்சர் கொப்பேகடுவ கூறியிருக்கிறார்! அப்படி அவரு நினைச்சதிலே என்ன தப்பு? அவர் சென்ற இடங்களில் எல்லாம் அவருக்கு நிலபாவாடை விரித்து, மேளதாளத்துடன், கழுத்து நிறைய மலர் மாலை

(5-ம் பக்கம் பார்க்க)

# தென்னகக் கவிஞர்களும் 'முற்போக்கு' முருகையனும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

புதுக் கவிதைகளை ஒலியொடிசற் புதிர்கள், குளியலறை முணு முணுப்புக்கள், காதுராவல்கள் என்றெல்லாம் ஒதுக்குகின்றார் முருகையன். ஆனால், இதே முருகையன், முன்னர் புதுக்கவிதை எழுதியதையும், சி. சு. செல்லப்பாவுக்கு அனுப்பி, அதை "எழுத்து" இதழில் இடம் பெறச் செய்ததையும் ஏன் மறந்துவிட்டார்?

புதுக்கவிதையால் சர்க்கப்பட்டதனாலோ அன்றேல், "எழுத்து"வில் இடம் பிடிப்பதற்கும் புதுக்கவிதையே வழி எனநினைத்ததனாலோ, முருகையன் புதுக்கவிதைகள் எழுதினார். ஆனால் கைலாசபதியுடன் நெருக்கமான உறவு ஏற்பட்டதன் பிறகு, முருகையன் புதுக்கவிதை எழுதுவதை விட்டுவிட்டார்; அதை வெறுக்கவும் தொடங்கிவிட்டார்.

"நானும் சும்மா சில வரிகளை மடக்கி எழுதிச் செல்லப்பாவுக்கு அனுப்பினேன். ஆனால் விஷயம் விளங்காத செல்லப்பா, அதைப் பெரிதாகக் கருதி "எழுத்து" இதழிற் பிரசுரித்து விட்டார்" என இப்பொழுது சமாளிக்கின்றார் முருகையன்.

தென்னகத்துக் கவிஞர்களைக் 'களட்டியும்' 'இறக்கியும்' தன் விமர்சனக் கட்டுரையை எழுதிய முருகையன் தொடர்ந்தும் தென்னிந்தியத் துவேஷ உணர்ச்சியை வளர்க்க முடியாததனாலோ அன்றேல் அவருடைய மனச்சாட்சியின் உறுத்தலினாலோ அன்றேல் அவருடைய கட்டுரைகளிற் காணப்படுகின்ற வழமையான முரண்பாடுகள் அவரையறியாமலே இங்கேயும் புகுந்துவிட்டதனாலோ (என்ன காரணம் என்பதை என்னால் சரியாகச் சொல்ல முடியுமா" என்று தெரியவில்லை), கட்டுரையின் முடிவில் நிலைதளம்பித் தள்ளாடிப் பரிதாபமாக விழுந்துவிடுகிறார்:

அவருடைய கட்டுரையின் இறுதிப் பந்திகள் இவை;

"இக்கட்டுரையின் தென்னகத்துக் கவிதைகளை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டுள்ளதாகச் சில பேர் நினைக்கலாம். ஏனென்றால் இக் குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு நோக்கும் எவருக்கும் தென்னகத்தில் எழுதப்படுவன பற்றி நல்ல அபிப்பிராயம் உண்டாகாது. அங்குள்ள கூடாத கவிதைகள் பற்றியும் இங்குள்ள நல்ல கவிதைகள் பற்றியுமே நான் எழுதியிருக்கிறேன் என்று சிலர் கருதலாம். அந்தக் கருத்திலும் ஓரளவுக்கு உண்மை இல்லாமல் இல்லை. (தடித்த எழுத்துக்கள் என்னுடையவை. இ. சி.)

ஆனால் நானும்தான் என்ன செய்துவிட முடியும்? அங்கும் சிறந்த கவிதைகள் தோன்றியிருக்கலாம். என்றாலும் கூடாத கவிதைகளுக்கே அங்கு அதிக பிரசாரம் உண்டு; அங்கு அவையே நன்குபரவுகின்றன. பிரபலம் அடைகின்றன. இங்கும் கூடாத கவிதைகள் பல தோன்றுகின்றன. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நல்ல கவிதைகளைத் தேடியறியும் வாய்ப்பும் வசதியும் இங்கே நமக்கு அதிகம் ஆகையால் அந்த நல்ல கவிதைகளின்பால் நம் கவனத்தைப் பதித்தோம்;

"கனி இருப்பக் காயை ஏன் கவர வேண்டும்?"

இந்த வசனங்களுக்கு விளக்கம் தேவையில்லை. முருகையனின் தடுமாற்றத்தையும் கோணங்கித்தனத்தையும் வாசகர்கள் இலகுவிற் புரிந்துகொள்வார்கள்.

உண்மையையே சொல்வேன் எனச் சத்தியம் செய்துவிட்டுப் பொய்ச்சாட்சி சொல்லும் ஒருவன், இறுதியில், "நான் பொய் சொன்னதாகச் சிலர் நினைக்கலாம்: அப்படி நினைப்பதிலும் ஓரளவு உண்மை இல்லாமல் இல்லை" என்றுசொல்வதைப் போலிருக்கின்ற முருகையனின் இறுதிப் பந்திகள்!

## இலக்கியச் சிந்தனைகள்

## இலக்கியச் சித்தன்

"ஒரு கால்நூற்றாண்டுக் கவிதை வரலாற்றில் தென்னகமும் ஈழமும்" என்ற பென்னம் பெரிய தலைப்பிற் கட்டுரை எழுத முன் வந்த முருகையன், தென்னகத்திலும் நல்ல கவிதைகள் வெளிவந்திருக்கலாம் என்றும் குறிப்பிடும் முருகையன், அந்த நல்ல கவிதைகளையும் தேடிப் பிடித்த பிற்பாடல்லவா தன் கட்டுரையை எழுதியிருக்கவேண்டும்? கனி

(7-ம் பக்கம் பார்க்க)

---

## இலக்கிய உலகு

### வேதாளம்

"பதின் மூன்று பத்திரிகைகளே இறக்குமதி செய்யப்படலாம் என்ற நிலை இருப்பினும்கூட ஈழத்துச் சஞ்சிகைகள் எவ்வித வளர்ச்சியையும் பெற்றுவிடவில்லை." (தினகரன் 19.2.74)

—இவ்வாறு அழுதுதீர்த்திருப்பவர் யார் தெரியுமா? சொன்னால் மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள். சாட்சாத் எச். எம். பி. மொஹிதீன் என்ற மனிதரே இப்படிக் கூறியிருக்கிறார்!

இந்திய பத்திரிகைகளே ஈழத்து தமிழ் சஞ்சிகைகளின் வளர்ச்சியைத் தடை செய்கின்றன. எனவே அவற்றைத் தடைசெய்ய வேண்டும்; என்று தென்னிந்திய துவேஷம் பிடித்து அலறி வந்த 'முற்போக்கு' அணியிலிருந்து இன்றுதான் இப்படியான குரல் பிறந்திருக்கிறது;

தடைகளினால் இலக்கியம் வளர்ந்துவிடாது; போட்டிபோட்டு வளர்ந்தால்தான் உயர்ந்த இலக்கிய சிருஷ்டிகள் உருவாகுவர்; தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளை தடைசெய்வதால், நம்முடைய ஈழத்து இலக்கிய உலகு பாலைவனமாகும் நிலைதோன்றும்; தாம் விரும்பியதை வாசிக்கின்ற தமிழ் வாசகனின் உரிமை பறிபோகும்—இந்தியாவுக்கும் நமக்குமிடையே மிகப் பழங்காலத்திலிருந்து இருந்து வருகின்ற கலாசார, இலக்கிய தொடர்புகள் முறிந்துவிடும்; ஆகவே முட்டாள்தனமாக இந்திய சஞ்சிகைகள் தடைசெய்யப்படக்கூடாது என்றுநாம்கூறிவந்தோம். அது அவர்கள் செவிகளில் விழவில்லை.

இந்திய சஞ்சிகைகளே எம்மவர் வளர்ச்சியை தடைசெய்வதாக கூக்குரல் எழுப்பி இந்திய துவேஷத்தை வளர்த்தார்கள். அது பற்றி 'அறிக்கை' எழுதினார் எச்.எம்.பி.

இந்திய சஞ்சிகைகள் தடைசெய்யப்படவேண்டும் என்று முழங்கினார் தோழர் வி.பி பொதுவுடமைக் குஞ்சுகள் எல்லாம் கும்பலோடு சேர்ந்து கோவிந்தா போட்டார்கள். குமாரசூரியரைப் பிடித்து, தமிழக சஞ்சிகைகளுக்கு தடைவிதித்தார்கள்.

இப்போதுதான், இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வரவிடாமற் தடைசெய்தும் — இங்கு ஈழத்து சஞ்சிகைகள் வளர முடியவில்லை என்கின்ற 'உண்மை' எச்.எம்.பி.க்கு தெரியவாரம்பித்திருக்கிறது.

'முற்போக்கு'களின் மூளை எவ்வளவு புத்திசாலித்தனமானது என்பதை இதிலிருந்து பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஃ ஃ

### கற்பத்து வெளிச்சமும் கம்பத்து வெளிச்சமும்

அண்மையில் ஓர் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா கொழும்பில் நடந்தது. இந்த விழாவில் முற்போக்குவாதி என்று கூறிக்கொள்ளும் கலாநிதி ஒருவர் — சிங்களத்தம்பி — அந்த நூலை விமர்சித்துப் பேசினார்.

அந்த நூலில் ஓரிடத்தில் 'கற்பத்து வெளிச்சம்' என்கின்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதை வெகுவாக குறித்த கலாநிதி சிலாகித்துப்பேசினாராம்: ஒருபெண் கற்பம் தரித்திருக்கும் போது முகத்தில் ஓர் ஒளி தோன்றும் என்றும் அந்த 'ஒளி'யையே 'கற்பத்து வெளிச்சம்' என்று புதிய சொற்றொடரைக் கையாண்டு சிறுகதை ஆசிரியர் வர்ணித்துள்ளாரென்றும் புகழ்ந்து பாராட்டினாராம் கலாநிதி.

கூட்டம் முடிந்ததும்—மற்றோர் முற்போக்கு எழுத்தாளர் கலாநிதியிடம் சென்று, "நல்லாகத்தான் பேசினீர்கள்; ஆனாலும் நீங்கள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது; குறித்த நூலில் இடம்பெற்றிருக்கவேண்டிய சொல் "கம்பத்து வெளிச்சம் என்பது: அது அச்சுப்பிழை காரணமாக "கற்பத்து வெளிச்சம்" என்று இடம் பெற்றுவிட்டது" என்று விளக்கம் அளித்தாராம்.

இதைக் கேட்டதும் கலாநிதியின் முகத்தில் ஈயாடவில்லை!

இப்படிப்பட்டவர்கள் தாம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையை இன்று குத்தகைக்கு எடுத்துக்கொண்டு மக்களை முட்டாள்களாக்கி வருகிறார்கள்.

---

## சங்கப் பலகை

### ஈழத்துக் காவிய தீபகம்

(சிறுகதைத் தொகுதி)

"கவிஞன்" என்ற வகையிலே மக்கள் மத்தியில் அறிமுகமான 'வன்னியூர்க் கவிராய'ரின் சிறு கதைகளிற் பதினைந்தைத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கும் தொகுதிதான் 'ஈழத்துக் காவிய தீபகம்.'

சாதாரணமாக ஈழத்தின் மற்றைய சிறுகதை ஆசிரியர்களின் பார்வைகளுக்கெட்டாத இடங்களிலெல்லாம் வன்னியூர்க் கவிராயரின் பார்வை விழுந்திருக்கிறது. சமூகப் பொறுப்புணர்வுடன் இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும்என்கிற கோட்பாட்டை ஆசிரியர் வரித்திருப்பது தெளிவாகப் படுகிற அதே நேரத்தில், இன்று 'சமூகப் பார்வை' என்று சொல்லி வரட்டு இலக்கியம் படைக்கிற அந்நேரிலிருந்து அவர் விலகி நிற்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

மூடப் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகளைச்சாடி, விவசாயத்தின் பெருமை, உழைப்பு — நேர்மை இவற்றின் மகிமையை கதைக்குக் கதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். அவருடைய பல்வழிப்பட்ட அறிவு, கதைகளின் வெற்றிக்குக் காரணமாயமைகிறது.

'வெள்ளி திசை' 'தசர விளக்கு' ஆகியவை குறிப்பிடத்தக்க கதைகள், கதை சொல்லும் பாணியில் இன்னுஞ் சற்றுக் கவனத்தையும் ஏற்றியிருந்தாரானால் இன்னுஞ் சிறப்பாக இருந்திருக்கும்.

வாசகனுக்குப் புதிய அநுபவமாகிற கதை நிகழ்களங்களைத் தேர்ந்தெடுத்ததாலும், வேறுபட்ட தமது பார்வைக் கோணங்களாலும், தமது கதைகளைத் தனித்துவமாக்கியிருக்கிறார். ஆசிரியர். அட்டைப் படத்தைச் சிறிது ஒழுங்காக்கியிருந்தால் புறத்தோற்றமும் அழகுற்று விளங்கியிருக்கும். விலை: 3.25. வெளியீடு: ஞானப்பிரகாசர் ச. ச. நிலையம், உடுவில்.

—வல்லவரையன்.

---

# ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவையின் மூன்று முக்கிய தீர்மானங்கள்!

"ஈழத் தமிழ் மக்கள் எல்லோரும் பெருமைப் படும் வகையில் இவ்வாண்டு சனவரித் திங்கள் 3ம் திகதி யாழ்நகரில் தொடங்கி நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, முதல் ஏழு நாட்களும் எதுவித குழப்பமோ அசம்பாவிதங்களோ இன்றி வெகு சிரும் சிறப்புமாக நடைபெற்றிருக்க கடைசி நாளான 10ந் திகதி நடைபெற்றபொது வரவேற்புக் கூட்டத்தில் பொலிசார் எதுவித காரணமின்றியும் எதுவித முன் அறிவித்தலோ எச்சரிக்கையோ இன்றியும் அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் மீதும் வெளிநாடுகளிலிருந்து பிரதிநிதிகளாகவும் பார்வையாளர்களாகவும் வந்திருந்த அறிஞர் பெருமக்கள் மீதும் காட்டு மிருகங்களைப் போன்று திடீரென்று பாய்ந்து அவர்களைக் கண்ணீர்ப்புகைக்குள்ளாக்கி விட்டுத் துவக்குகளாலும் குண்டாந்தடிகளாலும் கோழைத்தனமாகத் தாக்கி பல மக்கள் காயப்படுவதற்கும் பல லட்சம் பெறுமதியான பொருட்சேதம் விளைவதற்கும் தமிழ் உயிர்கள் பல பறிபோவதற்கும் காரணமாக விருந்த பொலிசாரின் அநாகரிகமான, காட்டுமிராண்டித் தனமான அட்டூழியச் செயலை ஈழத்து எழுத்தாளர் பேரவை வெகு வன்மையாக கண்டிப்பதோடு, பொலிசாரின் இவ் அட்டூழியச் செயலின் விளைவாகப் பொருளிழந்தும் காயப்பட்டும் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் இழந்தவர்களின் உற்றார் உறவினர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

மேலும்,—

நிதி உதவுக!

பொலிசாரின் அன்றைய, காட்டுமிராண்டித் தாக்குதலையடுத்து உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு கொழும்புச் தமிழ் சங்கமும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையும் சேர்ந்து தொடங்கியுள்ள உதவி நிதிக்குத் தாராளமாகக் கொடுத்துதவும்படி தமிழ் மக்கள் அனைவரையும் இப்பேரவை கேட்டுக்கொள்ளுகிறது:

பாராட்டு

மலேசியா தமிழ் நாடு பாரீஸ் ஆகிய இடங்களில் இதற்கு முன் நடைபெற்ற மூன்று தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பங்குபற்றிய அறிஞர்களாலேயே யாழ் நகரில் நடைபெற்ற நான்காவது மாநாடு முன்னைய மாநாடுகளிலும் பார்க்கச் சிறப்பாக நடைபெற்றுள்ளது என்று பாராட்டப்படுமளவுக்கு மாநாட்டைப் பலத்த எதிர்ப்புகள் மத்தியிலும் அரசாங்கத்தின் ஆதரவு எதுவுமின்றியிருந்தும் திட்டமிட்டபடி சிறப்பாக நடத்தி முடித்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையையும் குறிப்பாக அதன் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களையும் வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளாரையும் இப்பேரவை பாராட்டுகின்றது.

# பாரில் எழுந்த தமிழோசை

## (5) வரலாற்றுப் பெருமையை உணர்த்திய ஊர்வலம்

கோவை-மகேசன்

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற தமிழர்கள் இலங்கையின் பூர்வ குடிகள் அல்லர்; அவர்கள் வந்தேறு குடிகள்; தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு படையெடுத்துவந்து இங்கு தங்கிவிட்ட தமிழர்களின் பரம்பரையினர்!'

—இந்தச் சாரப்பட, இன்றைய அரசாங்கத்தின் முதல் நிதியமைச்சராக இருந்தவர், — உண்மையை ஆழக் குழி தோண்டிப் புதைத்து—ஈழத் தமிழர்களை அவமதிக்கும் கருத்தை ஆட்சி மன்றத்திலே வெளியிட்ட நேரத்தில், தன்மானத் தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் கொதித்துக் குமுறத்தான் செய்தன.

ஆனாலும், அன்றைய அமைச்சர் வெளியிட்ட இந்த உண்மைக்குப் புறம்பானதும் வரலாற்றுத் திரிப்பானதுமான பொய்மைக்கருத்துக்கு உடனடியாகத் தகுந்த வரலாற்று ஆதாரங்களுடன் பதில் அளிக்க வேண்டியவர்களான இந்நாட்டின் தமிழறிஞர்கள் — கலாநிதிகள் — ஏனோ வாய் மூடிக்கிடந்தனர்.

ஈழத் தமிழன், வந்தேறு குடியல்ல — ஈழத்தின் மூத்த குடியே அவன்தான் — என்பதை எடுத்துக் கூறி நிலைநாட்டி வரலாற்றையே திரித்துக்கூறியும் எழுதியும் வரும் சிங்கள ஆதிக்க புரியினருக்கு சவுக்கடி கொடுக்க நம்மிடையே ஒரு வரதராசனோரா, பன்மொழிப்புலவர் அப்பாதுரையாரோ, சதாசிவபண்டாரத்தாரோ இராசமாணிக்கனாரோ இல்லாமற் போய்விட்டார்களே என்று அப்போது மனம் குமுறியவர்களில் நானும் ஒருவன்.

இந்நாட்டில், நம்மிடையே அத்தகைய ஆற்றல் வாய்ந்தோர் அறிஞர் பெருமக்கள் இல்லையென்று நான் கூற மாட்டேன்! சிலர் நமக்கேன் இந்த வம்பு என்று இவற்றிலிருந்து ஒதுங்கியிருந்தார்கள்; வேறு பலர் தமிழ்ப் பகைவர்களுடன் சேர்ந்து கொண்டு தமிழினத்தையே காட்டிக்கொடுத்துக் காலம் தள்ளிவருகின்றனர்.

பாடப் புத்தகங்களிலே கூட வரலாற்றை திரித்து மாற்றியெழுதி அவற்றைப் படிக்கும் தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சு மனங்களிலே 'இந்த நாடு சிங்களவர்களுக்குரியநாடு; தமிழர்களாகிய நாம் இங்கு வந்தேறிய குடிதான்' என்கின்ற அடிமை மனப்பான்மையை — தாழ்வு எண்ணத்தை — உருவாக்குகின்ற ஒரு திட்டமிட்ட முயற்சி இங்கு நடைபெற்று வருகிறது. இதற்கு உடந்தையாக இருந்து — தங்கள் இனத்தையே தாழ்த்துகின்ற செயலுக்கு உதவி புரிந்து வருகின்றனர் இந்நாட்டிலுள்ள சில தமிழ்க் கலாநிதிகள்!

புதைபொருள் ஆராய்ச்சியை எடுத்துப்பார்த்தால் அங்கேயும், இந்நாடு சிங்களவர்களுக்கேசொந்தமானது; தமிழர்கள் வந்தேறுகுடிகள்; என்று காட்டிட முயற்சி; வானொலியை எடுத்தால், அங்கும் சிங்கள மொழியையும், இனத்தையும் உயர்த்தியும், தமிழைத் தாழ்த்தியும் காட்டிடும் திட்டமிட்ட பிரச்சாரம்; இந்து மத சம்பந்தமான நிகழ்ச்சிகளில் கூட பௌத்தமதப் பிரசாரம்; பாடசாலைப் புத்தகங்களிலும் இதையே நுழைத்து தமிழ்க் குழந்தைகளின் உள்ளங்களிலே தாழ்வு மனப்பான்மையை வளர்க்கின்ற முயற்சி

ஒரு பாடப்புத்தகத்திலே —ஏழாம் வகுப்புக்குரியது என்று நினைக்கிறேன் அதிலே கி. பி. 13ம் நூற்றாண்டிலே தான் தமிழர்கள் இந்த நாட்டிற்கு வந்தவர்கள்; அதற்கு முன் இங்கு தமிழர்கள் வாழ்ந்ததே கிடையாது என்று எழுதப்பட்டிருக்கிறது.

இப்படியெல்லாம் — வரலாற்று உண்மைகளை மறைத்து— தமிழர்களே இந்நாட்டின் பூர்வகுடிகள் என்கின்ற உண்மையை — தமிழர்கள் இந்நாட்டை ஆண்டபரம்பரையினர் எனும் உண்மையை மறைத்து இந்நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தமானதாக்கிக் காட்டும் சரித்திரப் புரட்டுகளுக்கு தமிழர்களாகப் பிறந்துவிட்ட சில கலாநிதிகளும் சிங்கள 'பாலா'க்களும் உடந்தையாக இருப்பது கண்டு உண்மையிலேயே நாம் வேதனையடைய வேண்டும்.

போது — அவர்கள் வியந்தார்கள்!

"மிகவும் அருமையாக இருக்கிறது" என்று பாராட்டுத் தெரிவித்தார் பண்பாட்டினால் தமிழச்சியாகவாழ்ந்து வரும் கனேடிய நாட்டு பேராசிரியை பெரண்டாபெக்!

"தமிழர்களின் பழைய வரலாற்றையும், சரித்திரத்தையும், தமிழ் மீது அவர்கள் கொண்டுள்ள ஆழமான பற்றினையும் துல்லியமாக இந்த காட்சி வண்டிகளின் ஊர்வலம் எடுத்துக்காட்டுகிறது" என்று மனம் விட்டுப் பாராட்டினார் குறள் பிரியர் வண. பிறைசோம்.

"எங்கும் தமிழ் மணம் கமழ நடைபெறும் இந்த ஊர்வலக் காட்சிகளை எப்போதும் நான் மறக்க மாட்டேன்" — என்றார் லண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஜோன்மார்.

மகிழ்ச்சிபொங்கிட திரண்டு நிற்கின்ற மக்கள் வெள்ளத்திலிடையே ஆடி அசைந்து வந்துகொண்டிருந்தது.

காட்சி வண்டிகளின் ஊர்வலத்தை மாநாட்டு அமைப்புச் செயலாளரும், ஈழத்தின் மிகச் சிறந்த கட்டடக் கலைஞர்களில் ஒருவரும், ஈழத்தில் தயாரிக்கப்பட்ட சிறந்த திரைப்படங்களில் ஒன்றான 'குத்து விளக்கு' எனும்திரையோவியத்தின் சிருட்டி கர்த்தாவுமான திரு. வி. எஸ். துரைராசா அவர்களும் யாழ் உதவிபொலீஸ் அதிபர் திரு. சந்திரசேகராகவும் தொடக்கிவைக்க, ஊர்வலம் நகருகிறது.

நந்திக்கொடி உயர்த்தி, நம் தமிழ் நிலத்தை ஆண்டிருந்த சங்கிலியனின் கோட்டையிலிருந்து—அவன் கட்டியெழுப்பிய சட்டநாதர் ஆலய முன்றலிலிருந்து—பழந் தமிழ் ராஜதானியிலிருந்து காட்சி வண்டிகளின் ஊர்வலம் புறப்பட்டதாற் போலும் — அழகான காளைமாடு ஒன்று மிடுக்குடன் ஊர்வலத்தின் முன்னே.— விடுதலைவேட்கைகொண்ட இளைஞன் ஒருவன் துடிப்



சுவீடன் நாட்டு தமிழ் ஆராய்ச்சி அறிஞர் கலாநிதி டீல் அவர்களுடன், இரு தமிழ் வள்ளல்களான திருவாளர்கள் நடேசலிங்கமும் கனகராசாவும் சிரித்துப் பேசிமகிழ்ந்திடும் சிங்காரக் காட்சி இது.



காட்சி வண்டிகளின் ஊர்வலத்தை கைகூப்பி வணங்கி ஆரம்பித்து வைக்கிறார் மாநாட்டு அமைப்புச் செயலாளர் கட்டிடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா, அருகே கறுப்புக் கண்ணாடியணிந்து கூப்பிய கரங்களுடன் காணப்படுபவர்தான் பொலிஸ் அதிபர் திரு. சந்திரசேகரா தொழுதகையுள்ளும் கண்ணீர்ப் புகையிருக்கும் என்பதை யார் கண்டார்?



அந்நியனுக்கு பணிய மறுத்து—தமிழன் சுதந்திரம் காத்திட போராடிய வீரன் பண்டார வன்னியன் ஊர்வலம் வருகின்ற வீர மிகு காட்சி இது.

இத்தகைய வரலாற்றுப் புரட்டுக்களை வெளிக்கொணர்ந்து — தமிழன் இந்நாட்டின் ஆண்ட பரம்பரையில் வந்தவன்—அவனே இந்நாட்டின் ஆதிமுதல் சொந்தக்காரன் என்பதை நிரூபிக்கும் வகையில் ஈழத் தமிழர்களின் வரலாறு முறையாக எழுதப்படவேண்டும்; இந்த முயற்சியில் கலாநிதி சி. பத்மநாதன் போன்ற இளைய தலைமுறையினர் இப்போதிருந்தே ஈடுபடவேண்டும் என்கின்ற ஆசையையும் இச்சமயத்தில் கூறிக்கொள்வது பொருத்தம் என்று கருதுகிறேன்.

ஈழத் தமிழர்களின் பாரம்பரியத்தையும், பழம் பெரும் பண்பாட்டை எடுத்துக் கூறுகின்ற வரலாறுகளையும் இருட்டடிப்புச் செய்யும் முயற்சிகள் ஒருபக்கம் நடந்தாலும்— அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினையொட்டி நடைபெற்ற காட்சி வண்டிகளின் ஊர்வலம் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பையும், பண்பாட்டுப் பெருமையையும், வந்திருந்த வெளிநாட்டு பேரறிஞர்களுக்கு தெள்ளத்தெளிவாக விளக்குகின்ற வகையில் அமைந்து விட்டது.

ஆம், காட்சி வண்டிகளின் எழிலூர்வலம் கண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மகிழ்ச்சியிலே திளைத்து நின்றார்கள்; காட்சியில் எடுத்துவரப்பட்ட ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சிகளையும் மெத்த ஆர்வத்துடன் கேட்டறிந்தார்கள்! ஈழத் தமிழர்களுக்கு இத்தனை தொன்மை மிக்க பழம்பெரும் பாரம்பரியமும் வரலாறும் உண்டு என்பதைக் கேட்டு அறிந்த

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆளும் காலம் நிச்சயம் வந்தே தீரும்" என்றார்கள் சாலித் தம்பதியர்!

ஆம், இவ்வாறு எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொண்ட காட்சி வண்டிகளின் ஊர்வலம், வீதிகளின் இருமருங்கும் ஆர்வத்துடன்



சங்கிலிமன்னனின் கோட்டையின் உருவம் தாங்கிய காட்சி வண்டியின் முன்னால், பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுடன் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

புடன் நடந்து செல்வது போல —நடந்துவர—அதன் பின்னே—

தமிழர்களின் பழம்பெரும் மங்கல இசைக்கருவியாகிய நாதசுரத்திலிருந்து எழுகின்ற கானமிர்தத்தை பரப்பிக்கொண்டு காட்சிவண்டியொன்று நகர்ந்துவருகிறது!

(7-ம் பக்கம் பார்க்க)

## எண்ணம்

# மன்னார் இடைத்தேர்தல் முடிவு (2)

மன்னார் இடைத்தேர்தலில் தமிழர் கூட்டணி வேட்பாளர் அற்பவாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்திருப்பினும்—இடைத்தேர்தலின் போது தமிழர் கூட்டணி எந்த எந்த பிரச்சினைகளை மக்கள் முன் எடுத்து வைத்ததோ, அதே பிரச்சினைகளைப் பற்றிப் பேசியே ஐ. தே. கட்சியும் அங்கு தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ள முடிந்திருக்கிறது;

இது ஒரு வகையில் தமிழர் கூட்டணிக்கு கிடைத்த ஒரு தார்மீக வெற்றியென்று கூறுவதில் தவறில்லை!

புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை யென்பதை இடைத்தேர்தல் மூலம் மன்னார் மக்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று தமிழர் கூட்டணி கேட்டது;

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் இப்போதுள்ள பாரபட்சம் நிறைந்த அரசியல் சட்டம் அகற்றப்பட்டு, இந் நாட்டிலுள்ள சகல இன, மத சமூகங்களினதும் கலாசாரங்களையும் பாரம்பரியங்களையும் பாதுகாக்கக்கூடிய புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும் என்று ஐ. தே. க; மன்னார் மக்களிடம் எடுத்துக்கூறியது!

எனவே தமிழர் கூட்டணிக்கும், ஐ. தே. கட்சிக்கும் கிடைத்த வாக்குகள் அனைத்தும், புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக விழுந்த வாக்குகளாகும். பதிவான 26580 வாக்குகளில், 25873 வாக்குகளும் புதிய அரசியல் சட்டத்தை புதை குழிக்கு அனுப்புவதற்காக வீசப்பட்ட வேட்டுக்களாகும். எனவே மன்னார் தமிழ் பேசும் மக்களின் தீர்ப்பு புதிய அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்பது தெட்டத்தெளிவாகிவிட்டது. புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்துவிட்டார்கள் மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்கள்.

அதே வேளையில் — ஐ. தே. க. தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய கட்சியா? அது கொண்டு வரப்போவதாகக் கூறும் புதிய அரசியலமைப்பில் தமிழ் மொழியின் அந்தஸ்து எத்தகையதிருக்கும்! பௌத்தத்துக்கு தனியிடம் கோரிய ஐ. தே. க. மதச்சார்பற்ற — சகல மதங்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கும் அரசியலமைப்பை கொண்டுவருமா? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகாண தவறிவிட்டார்கள் ஐ. தே. கட்சிக்கு வாக்களித்த தமிழ் பேசும் மக்கள்.

இப்போதைய அரசியல் சட்டம் உருவான போது — அதில் இடம்பெற்றிருந்த தமிழ் மக்களுக்கும் மொழிக்கும் பாதகமான அம்சங்களை — பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்து ஏனைய இந்து, இஸ்லாமிய கிறித்துவமதங்களை இரண்டாந்தர நிலைக்கு தள்ளும் விதிகளை — எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் ஏற்றுக்கொண்ட கட்சி ஐ. தே. கட்சியென்பதையும் மன்னார் வாக்காளர்கள் ஏனோ சிந்தித்துப்பார்க்கத் தவறிவிட்டார்கள்.

மற்றொன்றையும் மன்னார் இடைத்தேர்தலின் போது ஐ. தே. க. கூறியது. அதாவது தமிழரசுக்கட்சி ஒரு பிரதேசக்கட்சியென்றும், அதனால் ஒரு போதும் அரசாங்கம் அமைக்க முடியாதென்றும், ஐ. தே. க. வினால் மட்டுமே மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியுமென்றும் ஐ. தே க. பிரசாரம் செய்தது. இந்தப் பிரசாரமும் சில வாக்காளர்களை மயக்கியிருந்திருக்கலாம்.

1960-ம் ஆண்டு 'பிரதேசக்கட்சி' யென்று கூறப்படும் தமிழரசுக்கட்சியின் ஆதரவு இல்லாத காரணத்தினால் ஐ. தே. கட்சி ஆட்சி நடத்த முடியாமல் பதவியிலிருந்து பரிதாபமாகத் தூக்கி எறியப்பட்டதையும், 1965-ம் ஆண்டு அதே தமிழரசுக்கட்சியின் உதவியில்லாவிடின் ஐ. தே. கட்சியினால் அரசாங்கம் அமைத்திருக்கவே முடியாமற் போயிருக்கும் என்பதையும் மன்னார் தேர்தல் பிரசாரத்தின் போது மக்களிடமிருந்து ஐ. தே. க. மறைத்து விட்டது!

அடம்பன் கொடியும் திரண்டால்மிடுக்கு என்பதுபோல் — தமிழ் பேசும் மக்கள் கட்டுக்கோப்புடன் ஒரே அணியாகத்திரண்டு நின்றால் மட்டுமே—தமது சக்தியைப் பயன்படுத்தி இந்நாட்டில் உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழ்ந்திட வழியேற்படும் என்கின்ற மிகப்பெரிய அரசியல் தத்துவத்தை ஐ. தே. கட்சிக்கு வாக்களித்த தமிழ் மக்கள் ஏனோ மறந்து விட்டனர்!

விசாரணையோ, விடுதலையோ இன்றி ஆண்டுக்கணக்காக சிறைகளில் தள்ளப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினை; புதிய அரசியல் சட்டத்தை முன் வைத்து, தந்தை செல்வா பதவி விலகியதால் நடைபெற வேண்டிய காங்கேசன்துறை இடைத்தேர்தலை, கடந்த 15 திங்களாக நடத்தாமல் சனநாயகத்தைக் கொன்றொழித்து வரும் கொடுங்கோன்மை; அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பயங்கரக் கொடுமை; இவற்றையெல்லாம் மன்னார் இடைத்தேர்தலில் தமிழர் கூட்டணி முன் வைத்தது.—இதன் காரணமாக இதே பிரச்சினைகளை ஐ. தே. க.வும் அங்கு பேசியே ஆக வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே தான் மன்னார் இடைத்தேர்தலில்—தமிழர் கூட்டணி வேட்பாளர் வெற்றி வாய்ப்பை இழந்திருந்தாலும்—கூட்டணி முன் வைத்த பிரச்சினைகளுக்கு அங்கு தார்மீக வெற்றி கிடைத்துள்ளது என்று கூறுகிறோம்;

இதிலிருந்து தெரிவது ஒன்றே ஒன்றுதான்; மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்களிடம் 1956-ம் ஆண்டிலிருந்து வளர்ந்து வந்த இன, மொழி, இலட்சிய உணர்வுகள் கிஞ்சிற்றும் அழிந்து விடவில்லை! ஆனால் ஏதோ ஒரு வித தளர்ச்சியால் — மயக்கத்தால்—மாயையால் — [illegible] வினைக்கால் — ஒரு சிறிது சலனமடைந்து விட்டார்கள்; அரசியல் உண்மைகளை எடுத்துச்சொல்லி இலட்சியப் பாசறைக்குள் அவர்களை மீண்டும் இழுத்திட தமிழரசுக் கட்சியினர் இப்போதிருந்தே ஈடுபடவேண்டும். சிங்களக் கட்சிகளின் "தேசியம்" எனும் மாயத்திரைக்குள் தமிழினம் சிக்குமானால், தமிழ் சமுதாயத்தின் அழிவு நிச்சயத்திலும் நிச்சயமாகிவிடும்!

தமிழர் கூட்டணியைப் பொறுத்தவரை — தேர்தல் வெற்றி மட்டும் அதன் குறிக்கோள் அல்ல; தமிழ் தேசிய இனத்தின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் வளர்ப்பதும், இன விடுதலை இலட்சியப் பாசறைக்குள் அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் பிரதேச, மத, சாதி வேறுபாடுகளைக் கடந்து ஒன்றிணைப்பதுமே தமிழர் கூட்டணியின் முனைப்பான நோக்கமாக — வேலைத்திட்டமாக — இருந்திட வேண்டும்!

இதை உணர்ந்து தமிழர் கூட்டணியினர் துடிப்புடன் செயலாற்ற முன் வருவார்களாக!

# விலைவாசி நாள் தோறும் ஏறுது! கும்பிகாயுது! குடல் கருகுது!

## ஏழை வயிற்றில் அடிக்கும் ஆட்சியே! பதவியை விட்டு உடனே ஓடு!

இல்லாத பொய் வாக்குறுதிகளையெல்லாம் பொது மக்களிடையே கூறி, அவர்களை மயக்கி—மடக்கி, சந்திரமண்டலத்திலிருந்தாவது அரிசிகொண்டு வருவோம் என்று வீருப்புப்பேசி மக்களின் அமோகமான ஆதரவைப்பெற்று ஆட்சிக்கு வந்தது இந்த அரசு.

இனிப்பான வாக்குறுதிகளை உண்மையென நம்பிய மக்கள் தங்களது மேன்மையான—உறுதியான—வாக்குகளை ஸ்ரீ. ல. சு. கட்சியினருக்கு அளித்துத்தங்கள் வாழ்வையே அழித்துக்கொண்டார்கள் என்பதை இப்போது நாம் காணக்கூடியதாய் உள்ளது.

எங்கு பார்த்தாலும் பஞ்சம், கொடிய பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. அரிசி கிடைப்பது அரிது—கிடைத்தாலும் கொள்ளை விலை—பருப்பு — மல்லி, சீனி, மா எதுவுமே கிடையாது. சீனி விலை இரவோடிரவாக ஐந்து ரூபாவாகிவிட்டது. நாளுக்கு நாள் விலை ஏறுதல் வரிச்சுமை, திடீர் வரிகள் இப்படியான காட்சிகளைக் கண்டு கண்டு கண்களே மரத்துப் போய் விட்டன என்னசெய்வது என்று திண்டாடுகின்றார்கள் ஏழைகள்.

மக்கள் அரசாங்கம் என்று தங்களைத்தம்பட்டமடித்துப் பீத்தித்திரியும் இந்த மக்கள் விரோதக் கூட்டம் இன்னும் வெட்கம், ரோசம், மானம், மரியாதை, சூடு, சொரணையின்றி ஆட்சி நடத்துகின்றது.

முப்படைகளும், மூக்கில்லாதசினனின் ஆயுதமும் இருக்கும்போது என்ன பயம் என்கிற இறுமாப்பில் கண்டபடியெல்லாம் காட்டுமிராண்டித் தர்பார் நடத்துகின்றது இந்த அரசாங்கம்.

எந்தக் காலத்திலும்— எந்த ஆட்சியிலும் இல்லாத வறுமை-கோரமான வறுமை நிலவுகிறது இந்த ஆட்சியில் தான்-தொழிலாளரின் துயர் நீக்கப்பாடுபட்டதாக முதலைக் கண்ணீர் வடிக்கும் நாணயமற்ற போலித் தலைவர்கள் முண்டுகொடுத்தும் இந்த அரசு வங்குரோத்து நிலையில் இருந்து வருகின்றது;

இது மக்கள் அரசாங்கமா? இது ஜனநாயக அரசாங்கமா? இது சோஷலிஸ அரசாங்கமா? எந்த மடையன் இதை இப்படிக் கூறுவான்?

அரசாங்கத்தின் எலும்புத் துண்டுகட்குத் தவம்கிடக்கின்ற எட்டப்பர்கள்தான் இந்த அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்குகின்றார்கள். இவர்களைத் தவிர யாருமே இதைச்சோஷலிஸ அரசாங்கம் என்று கூறமாட்டார்கள்.

பாண் கூடக் கூப்பன் காட்டுக்கு வழங்கும் திட்டத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியது இந்த அரசாங்கம்தான்.

காலை 2½ மணியிலிருந்து மழையையும் — குளிரையும் —பனியையும் பாராமல் பலமைல் நீளத்தில் தினம் தினம் கியூவைப் பார்க்கும் போது உண்மையிலேயே இலங்கையன் ஒவ்வொருவனும் வெட்கப்பட்டாக வேண்டும்.

அரசாங்கமே வங்குரோத்து—மக்களும் வங்குரோத்து எனவே இதை வங்குரோத்து அரசாங்கம் என்றால் என்ன? கியூவில் உள்ளவர்கள் அதிகாலையில் இந்த இடிவிழுந்த அரசாங்கத்தை திட்டு திட்டு என்று திட்டுகின்றார்களே — இது கேட்கவில்லையா இந்த ஆட்சிக்கு?

நடத்துவதென்றால் முறையாக அரசாங்கம் நடத்த வேண்டும் அல்லது ராஜினாமாச் செய்து விட்டு மறுமுறையும் தேர்தல் நடத்த வேண்டும்!

வைக்கற் பட்டறையில் நாய் படுத்த மாதிரி இந்த அரசாங்கம் தானும் நடத்தத்தெரியாமல் — நடத்துவோரிடமும் ஒப்படைக்க முடியாமல் இருந்தால் இன்னும் 6 மாதத்தில் இலங்கையின் ஜனத்தொகையில் பாதிப்பேர் இறந்து விடுவார்கள்.

மலைநாட்டுத் தமிழரைப் பழிவாங்கும் விதத்தை நாம் மாத்திரமல்ல — முழு உலகமே பார்த்துக் கொண்டிருக்கின்றது; சிங்களவனுக்கு வந்தனையும்— செந்தமிழனுக்குத் தண்டனையும் தரும் இவ்வரசாங்கம் நாசமாகாதா என்று திட்டத் தோன்றுகின்றது.

இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் என்ன பாணு உண்கிறார்கள்? இல்லையே! பழரசமல்லவா பருகுகின்றார்கள். அவர்களுக்கு என்ன குறை? ஆனால் அவர்கள் மீது நம்பிக்கை வைத்த மக்கள் கதி என்ன?

ஏ! சிங்கார வாழ்க்கை வாழ்ந்த மக்களைச் சீரழிக்கும் சிறிமா அரசாங்கமே! உன்போக்கால் மக்களது அடுப்படிகளிலெல்லாம் பூனை படுக்கின்றது. பச்சைப் பிள்ளைகளும் பனங்காய் சூப்புகின்ற பரிதாபத்தை நிற்பாட்டு அல்லது ராஜினாமாச் செய். மக்களது நூற்றுக்கு நூறு வீதமான எதிர்ப்பைத் தேடிக்கொண்ட பித்தலாட்ட அமைச்சர்களே— சோசலிசம் பேசி சோத்துக்கே அள்ளி வைத்த அடிவருடிகளே! நீங்கள் உடனடியாக விலகுங்கள். இலங்கைச் சரித்திரம் உங்களால் கறைபடியப் போகின்றது. பட்டினி போட்டுக் கொல்லும்பாதகர்களே நீங்கள் ஏன் இன்னும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்கு வெட்கம்— மானம் — ரோசம் — சூடு— சொரணை எதுவுமே இல்லையா? — எஸ். வில்வராஜன்.

### நந்தகுமார் — நம் நெஞ்சில் வாழ்வார்!



பால்மணம் மாறாப் பருவம் — வயது ஆகப் பதினன்கேதான். ஆனாலும் பைந்தமிழுணர்ச்சி மிக்க மாணவன் சின்னத் தம்பி நந்தகுமார். வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர். எனவே தமிழ் உணர்ச்சி இம்மாணவனுக்கு இயல்பாகவே ஏற்பட்டதில் வியப்பேது?

தமிழுணர்வு பூத்துக்குலுங்கும் நெஞ்சினரான இவர் தமிழ்த்தாயின் எழிற்கோலம் காண தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் (சனவரி 10-ம் நாள்) பொதுக் கூட்டத்துக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்கு சென்றார்; உயிரைத் தமிழுக்கு தந்தார். பிணமாக வீடு சேர்ந்தார்!

இந்த வீரமைந்தனின் தந்தையார் சுப்பிரமணியம் சின்னத்தம்பி. தாயார் சிவக்கொழுந்து. ஆனந்தன், ஆனந்தகுமாரி, சந்திரகுமாரி, சூரியகுமாரி ஆனந்தபாலன், சிவபாதம், ஆகியோர் இவரது உடன்பிறப்புக்கள், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் மாணவராக இருந்தவர்.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில் பொலிசாரின் காட்டுமிராண்டி தாக்குதலையடுத்து தன்னுயிரைத் தந்து தமிழை வாழ வைத்த இந்த இளம் பிஞ்சு நந்தகுமார் எல்லாத் தமிழ் உள்ளங்களிலும் என்றும் நின்று நிலைத்து வாழுவாரென்பதற்கு ஐயமுண்டோ?

### பௌத்த ஆதி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் யாழ்குடா நாட்டின் கரையோரமாகவுள்ள 'சம்பாதுறை' யென்றும், அந்த இடத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதியையும்! புனித பிரதேசமாக்குவதுடன், தொல்பொருள் ஆய்வுக்குரிய பிரதேசமாகவும் கலாசார அமைச்சு விரைவில் பிரகடனப்படுத்தப் படவுள்ளது. தேவநம்பியதீசல் அரசங்கன்றை ஏற்றுக்கொண்ட சம்பவமும் அவ்விடத்தில் நினைவுச்சின்னத்தில் பொறிக்கப்படுமாம். அத்துடன் அவ்விடத்தில் அரசமரமொன்றும் நடப்படவுள்ளது.

பௌத்த ஆதிக்கம், அரசு ஆதரவுடன் வடக்கில் எவ்வளவு வேகமாகப் பரவி வருகிறது என்பதற்கு இந்நிகழ்ச்சிகள் மற்றுேர் உதாரணமாகும்.

# யாழில் எழுந்த தமிழ் ஓசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தமிழ் இசை கேட்டு மயங்கியபடி நிற்கின்றனர் வெளிநாட்டு அறிஞர்கள்!

அடுத்து— இதோ — அகம் புறமென பழந் தமிழர் வாழ்க்கையை இரு கூறுகப் பிரித்தார்; இன்றைய தமிழரும் புறமென்று கூறப்படும் வீரத்தை முற்றுக மறந்தாரில்லை; தேவையெனில் அதை மீண்டும் கைக்கொள்ளத் தயங்கார் என்று கூறுவதுபோல வீர இளைஞர்கள் சிலம்பமாடி வருகின்ற காட்சி கண்டோம்!

குன்றெடுக்கும் நெடுந் தோளான்-கொடைகொடுக்கும் கையான் குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றமாம் வீணைக்கொடியோன் விறல்வேந்தன் ஈழ வேந்தன் இராவணனைப் பார்க்கிறோம்!

இதோ வருகிருன் சங்கிலி மன்னன்! அரசவையிலே சங்கிலி மன்னன் வீரக்களை சொட்டுகின்ற கம்பீர முகத்துடன் சிங்காசனத்தில் இருந்து ஆட்சி நடத்துகின்ற அற்புதக்காட்சி! அதன் பின்னணியிலே சங்கிலிமன்னன் ஆண்டிருந்த கோட்டை கொத்தளத்தின் எழிலார்ந்த தோற்றம்! அந்த காட்சி நம்மையெல்லாம் 350 ஆண்டுகளுக்கு முன்பிருந்த செழுமையிகு பொற்காலத்தை நினைவூட்டியதுடன்—இழந்து போன தமிழ் அரசை நம் நினைவுக்கு கொண்டு வருகிறது.

ஆம், காட்சி வண்டிகளின் ஊர்வலத்தில் வந்த சுவையும் பயனும் நிறைந்த காட்சிகளிலே தலை சிறந்ததும், வரலாற்றுப்பின்னணியைக் கொண்டதும், இன்றைய தமிழனைச் சிந்திக்கத்தூண்டுவதும் சங்கிலி மன்னன அரசோச்சும் காட்சி என்றே நான் கருதுகிறேன்.

தமிழ்மொழிக்காக — தமிழ் சமுதாயத்துக்காக — மன்னுளில் மன்னர்கள் அள்ளித்தந்தார்கள். இந்நாளில் மன்னர்கள் இல்லை. மக்களே தமிழுக்காக வாரி வழங்க வேண்டிய காலம் இது. தமிழ்மொழிக்காக அள்ளி வழங்க தமிழனுக்கென்று ஓர் ஆட்சியும் இங்கு கிடையாது. யாராவது ஒரு வவ்ளல் தமிழ்மொழிக்காக சிறிது ஏசிவிட்டால்—தமிழ்மொழிக்காக தம்மாலியன்ற நிதியை பார்த்துப்பாராமல் வாரிக்கொடுத்துவிட்டால்— உடனே அரசியல் வண்ணம் பூசி அப்படிப்பட்டவனை குறிப்பிட்ட ஒரு அரசியல் இயக்கத்துடன் சம்பந்தப்படுத்தி அவனது 'கோட்டா'வை வெட்டும் கொடுங்கோலர்கள் ஆட்சி நடத்தும் காலம் இது.

அப்படியிருந்தும், அதற்கெல்லாம் அஞ்சாது — தமிழுக்காகவும், தமிழ் சமுதாயத்துக்காகவும்—கேட்டபோதெல்லாம், தயங்காது, பின்



ஈழத் தமிழன் அடிமையல்ல—அவன் இந்நாட்டை ஆண்ட பரம்பரை என்பதை இன்று கூறிக்கொண்டிருக்கும் சங்கிலி மன்னன் கோட்டையின் மேலைக்கோபுர வாசலின் தோற்றம் இது.

னிற்காது, வாரி வழங்கும் சில வள்ளல்கள் நம்மிடையே இருப்பதால்தான் மாதம் மும்மாரி பொழியாவிடினும் வருடம் ஒரு மாரியாவது பொழிகிறது;

அப்படிப்பட்ட வள்ளல்களில் இருவரை நான் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும், ஒருவர் உரும்பராயைச்சேர்ந்த வரும் கலா பிஸ்கட் நிறுவனத்தின் அதிபருமான திரு. நடேசலிங்கம் அவர்கள். மற்றவர் மில்க் வைற் சோப் நிறுவனத்தின் சொந்தக்காரரான திரு. கனகராசா அவர்கள்;

தமிழ் சமுதாயத்தின் தன்மானத்தைக் காப்பதற்காக தன்னுடைய சமாதான நீதவான் பதவியையே விட்டெறிந்த அன்பர் நடேசலிங்கம் ஒரு வள்ளல் மட்டுமன்றி வல்லவர் பக்தருமாவர். அவர் வள்ளலாரின் நூற்றுண்டு விழாவுக்கு எம்மை அழைத்ததும். அவ்விழாவில் சாலை இளந்திரையனுக்கும் நமமுடைய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்குமிடையே ஒரு விஷயத்தில் எழுந்த கருத்து வேறுபாடு— இவையெல்லாம் சுவையான விஷயங்கள்; இவை பற்றி பின்னர் எழுதுவேன்.

தமிழுக்காகவும் சைவத்துக்காகவும், பார்த்துப் பாராமல் தன்னுடைய பொருளை அள்ளி வழங்கி—வீ யாற்றி வருகின்ற வள்ளல் கனகராசா அவர்கள்தாம், பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் சங்கிலியன் ஊர்தியை தயாரித்து — தமிழ் மக்களுக்கும் வெளிநாட்டாருக்கும், ஆண்டபரம்பரை — ஈழத் தமிழ்ப்பரம்பரை' என்கின்ற வரலாற்றுண்மையை நினைவுபடுத்திடகாரணகர்த்தராக இருந்திருக்கிறார் என்ற உண்மையை அறிந்தபோது உள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது!

அன்பர் கனகராசா அவர்கள் சிறந்த தமிழ்த்தொண்டர் மட்டுமல்ல தலை சிறந்த சைவத்தொண்டருமாவர்: "சிவ நெறிப் புரவலர், சிவ தர்மவள்ளல், சிவ தர்ம பூபதி, போன்ற சிறப்புப் பட்டங்கள் இவரது சமயத் தொண்டைப்பாராட்டி இவரோடு வந்து ஒட்டிக்கொண்ட பட்டங்கள். இந்தப் பட்டங்கள் எல்லாவற்றையும் விட, நொடிக்கு நொடி, கிழமைக்கு கிழமை, திங்களுக்குத் திங்கள்—கனகராசா அவர்கள் வெளியிட்டு வரும் கையடக்கமான சிறு சிறு சமயப் பிரசார நூல்கள் அவரது அமைதியான மதத் தொண்டுக்கு என்றும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. காகிதத் தட்டுப்பாடு, விலை உயர்வுபோன்ற பல்வேறு நெருக்கடிகள் சூழ்ந்துள்ள இன்றைய நிலையிற்கூட, அன்பர் கனகராசா, அவர்களின் இலவச சமயப் பிரசார நூல்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

சமய சம்பந்தமான நூல்களை இப்படி கையடக்கமாகவும் கவர்ச்சியாகவும் வெளியிடுவது போலவே தமிழ் மொழி, இலக்கியம் சம்பந்தப்பட்ட அறிஞர்களின் கருத்துக்கள் கொண்ட நூல்களையும் அன்பர் கனகராசா அவர்கள் வெளியிடவேண்டும் என்ற எனது ஆசையையும் இத்தருணத்தில் வெளியிட விரும்புகிறேன்.

அமைதியும், அடக்கமும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றும் கொண்ட அன்பர் கனகராசா அருமையான தமிழ் விருந்தொன்றையும் தம்முடைய இல்லத்தில் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பிறிதொரு நாள் அளித்து மகிழ்ந்த நிகழ்ச்சியும் நெஞ்சம் மறக்கமுடியாததாகும்!

ஆம், சங்கிலி மன்னன் ஆண்டிருந்த அந்தத் திருக்கோலத்தைக் கண்டபோது, அந்தக்காட்சியை எமக்குத் தந்த அன்பர் கனகராசாவை பற்றி நெஞ்சார வாழ்த்திக் கொண்டே மேலும் ஊர்வலக்காட்சியை பார்க்கிறோம்!

சங்கிலி மன்னனின் பின்னே — ஈழத்தையாண்டிருந்த சோழ மாமன்னன்— தென் கிழக்காசியா முழுவதையுமே கட்டியாண்டு தமிழ் குடியரசு கண்டபெருவேந்தன்-தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலைக் கட்டியெழுப்பிய தமிழ்வேந்தன் —ராஜ ராஜ சோழன் வேங்கைக்கொடி அசைந்தாட கம்பீரமாக வருகின்ற தோற்றம் கண்டோம்!

ராஜராஜ சோழன் பின்னல் — ஆங்கிலப் படைகளை எதிர்த்துப்போரிட்டு, தமிழ் வீரம் காட்டி நின்ற வன்னி வீரன் — பண்டார வன்னியன், துரோகியினுல் காட்டிக்கொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட நிலையில் — வெள்ளைக்கார தளபதியின் முன்னே—கைகள் இரண்டும் சங்கிலியால் பிணைக்கப்பட்டபடி—தடந்தோள் இரண்டும் வீரத்துடன் சிலிர்த்தெழ— வேங்கைபோல தமிழ் மண்ணின் விடுதலைக்காக கார்சித்து நிற்கின்ற வீரமிகு காட்சி, காண்போர் உள்ளங்களை வீறு கொண்டெழச் செய்தது.

இத்தனை காவலர்களும் —வீரர்களும் முன்னல் பாதுகாப்புடன் வந்துகொண்டிருக்க, அழகு மிகு தமிழ்ப் பாவை—அகிலம் போற்றும் இலக்கியங்கள் பல கொண்டாள்—என்றுமே கன்னியாளவள் — இன்பத் தமிழணங்கு —சிலம்பும் மேகலையும், குண்டலகேசியும், புறமும், அகமும், பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பன்னூறு செல்வங்களும் அணி செய்ய-இதோ வருகின்ருள்! இதயம் சிலிர்த்திட வைக்கின்ருள்!

கோடிக்கணக்கான தமிழர்களின் உள்ளமெல்லாம் குடியிருக்கும் அந்தக் குலவிளக்கு—நம் இனத்தின் உயிருக்கு உயிரானவள் — ஏதோ கூறுகிருளே நம்மைப் பார்த்து — அது என்னவென்று கேட்போம்.

—வளரும்.



காட்சி வண்டியொன்றில் வந்த இராவணனின் கம்பீரத்தோற்றம்.

## ஆபீஸ் பையன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டு, காலில் விழுந்து தெண்டனிட்டு, வெங்காய மாலை சூட்டி நெல்லுப் பேழை கொடுத்து, ஆரத்தி எடுத்து மணவறை வைத்து மகிழ்ச்சியுடன் வரவேற்பு கொடுத்தா—உணவுக்காக மக்கள் படுகிற கஷ்டம் அவருக்கேஎங்கே தெரியப் போகுது? தென்னிலங்கையிலே யாரும் இப்படி அடிமைத்தனமாக அமைச்சர்களை வரவேற்காத போது—தமிழ்த் தரகர்களும் எடுபிடிகளும் இப்படி தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக அமைச்சரை வரவேற்பதன் மூலம் ஏழைகள் வயிற்றில் அடிக்க முனைகிருர்களே! அமைச்சருக்கு தடப்புடல் ஆடம்பர வரவேற்பு,ஏழைகளின் —அன்றுட உணவுக்கே உலை வைக்கிறதென்ற உண்மையை இனியாவது நம்மவங்க உணருவாங்களா?"

## நாங்கள் — அண்ணனின் தம்பிகள்

— அ. புராந்தகன் —

என்னருமைக் காசியண்ணன்
ஏறு போலும் எமதிளைஞர்க்கு
ஏற்ற நல்ல தமிழ்ப் புதல்வன்!

தன்னருமைத் தமிழ் காக்க
தான் வகித்த பெரும் பதவி
தகர்த்தெறிந்த அவன் — நல்ல தியாகி!

'வாழவைப் போம் தமிழை' யென்று
வீரமுடன் முழங்கியதால்
வெஞ்சிறையில் வாடுமவன் — ஒரு வீரன்!

ஈழமீதில் தமிழனுக்கு
இழைக்கும் இந்த அநீதி கண்டு
உணர்ச்சிக்கவி பாடுமவன் — நல்ல கவிஞன்!

காசியண்ணன் தம்பிகள் நாம்!
காசியண்ணன் பின் தொடர்வோம்!
காண்போம் ஓர் தமிழ் ஈழம்!

ஆசையுடன் எதுவரினும்
அஞ்சாமல் ஏற்றிடுவோம்!
அன்னைத் தமிழை அழியாமற் காத்திடுவோம்!

துப்பாக்கிக் குண்டெனினும்
துச்சமென மதித்திடுவோம்!
தூரநில்லோம்; தள்ளி விலகோம்!

சப்பாத்துக் கால் தூக்கிச்
சடசடென்று உதைத்தாலும்
செத்தாலும் மடிந்தாலும் தமிழ் காப்போம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலுள்ள ஐ. தே; கட்சியை "தேசியக்" கட்சியென்று பாராட்டுவதில் ஏது ஆச்சரியம்?

பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்துக்கு எதிராகப் பாத யாத்திரை போனவர்களின் கட்சியை-தமிழர்களை வெட்டுங்கள் கொல்லுங்கள் என்று தம் பத்திரிகையில் 1958-ம் ஆண்டு கவியெழுதிய கட்சியை —தோசை வடை நல்லெண்ணெய் என்று தமிழர்களை இகழ்ந்து, தமிழ் மொழி சட்டத்துக்கு எதிராக 1966-ம் ஆண்டு ஊர்வலம் நடத்திய கட்சிக்காரர் 'தேசியக்' கட்சியென்று இன்று பாராட்டுகிருர்!

ஆம் நண்பா, தமிழனது விடுதலைச் சிந்தனைகளை — உரிமையுணர்ச்சியை — நசுக்குவதில் சிங்கள சோசலிசமும், சிங்கள முதலாளித்துவமும் எப்போதுமே கைகோத்துவிடுகின்றன. 'தேசியம்' என்று இந்நாட்டில் கூறப்படுவதெல்லாம் தமிழர்களை மயக்கி அடிமைப்படுகுழியில் தள்ளி வீழ்த்திடும் "சிங்கள மாயை" தான்!

இந்த உண்மையை தமிழ் மக்களுக்கு எடுத்துச்சொல்லி, சிங்கள மாயையிலிருந்து அவர்களை விடுவித்திட ஓயாது உறங்காது பணியாற்றுவோம்!

—உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

சிக்கனம்

"டாம்பீக வாழ்வு கொண்டுவரும் தாழ்வு."

"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கன சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவியுங்கள்.

மில்க் வைற் சலவைப் பவுடர் ஒரு பைக்கட் 50 சதம் மட்டுமே:

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# முட்டையே இடாத கோழிகளின் கொக்கரிப்பு!

அன்பு நண்பா,

போர்க்களக் காட்சியொன்று காட்டுகிறேன்—என்னுடன் வருகிறாயா? என்ன இது—மன்னார் இடைத் தேர்தல் களத்திலே மனதிலே ஏற்பட்ட 'தழும்பு' இன்னும் ஆறிடமுன்னர் — மற்றோர் களத்துக்கு அழைக்கிறானே இவன் என்று என்மீது சினக்காது, நான் காட்டுகின்ற போர்க்களக் காட்சியைக் கண்டிடுவாயானால் — மன்னார் தந்திட்ட மனவேதனையும் உன்னைவிட்டு அறவே அகன்றிடும்!

யுத்த களம்! தானைகள் மோதிக் கொள்கின்றன; யானைகள் முட்டிக்கொள்ளுகின்றன; குருதியாறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது; வேல்களும் வாள்களும், ஈட்டிகளும் அம்புகளும் ஒன்றுடன் ஒன்று மோதி எழுப்புகின்ற பயங்கர ஓசை; அந்த ஓசைக்கு மேலாக 'வெற்றி—வெற்றி' என்று வீரர்கள் எழுப்புகின்ற வீரமுழக்கம்; பிணந்தின்ன வந்து காத்திருக்கும் கழுகுகளும் ஆந்தைகளும், காக்கைகளும், வல்லூறுகளும் சடசட வெனச் சிறகடித்துப் பறந்தபடியிருக்கின்றன; வீரமறவர்கள் தீரமுடன் போராடிக்கொண்டிருக்கின்றனர்!

அதோ ஒரு வீரன்! இரண்டு தொடைகளும் அறுபட்ட நிலையிலும் வீராவேசம் கொஞ்சமும் கெடாமல் உறுமியபடி கிடக்கிறான்! யானையொன்று பாய்ந்துவருகிறது அவனை நோக்கி! சுற்றுமுற்றும் பார்க்கிறான்—ஆயுதம் எதுவும் அவன்கைகளுக்கு அகப்படவில்லை; அதற்காக அவன் கலங்கிடவுமில்லை! அவன் மூளை வேகமாக வேலை செய்கிறது: தன்னுடைய அறுபட்ட ஒரு தொடையைப் பெயர்த்தெடுத்து, தன் வலிவு எல்லாம் சேர்த்து வேகமுடன் தாக்க வருகின்ற யானையை நோக்கி அதை வீசுகிறான்; வல்லவனுக்குப்புல்லும் ஆயுதமன்றோ? இத்தகைய மறத் தமிழனை நாம் கலிங்கத்துப் பரணியிலே காண்கிறோம்!

இதோ, களத்தில் மற்றோர் தமிழ் வீரன்! கையிலிருந்த வேலை தன்னை நோக்கி பிளிறிக்கொண்டு தாக்குவதற்காக வந்த யானையை நோக்கி வீசியெறிந்துவிட்டுத் திரும்புகிறான்—அப்பால் மற்றோர் யானை வருகிறது முரட்டுக் கோலத்துடன் அவனுடன் மோதுவதற்குத் தயாராக! சுற்றுமுற்றும் பார்க்கிறான்; எறிவதற்கு ஈட்டியோ வேலோ தென்படவில்லை; உடனடியாக அவனுக்கு தன்னுடைய மார்பிலே பாய்ந்திருக்கும் வேல் நினைவுக்கு வந்திடுகிறது—அதைப் பார்க்கிறான் — அவன் முகத்தில் களிப்பு பிறக்கிறது; தன் மெய்யில் பாய்ந்திருந்த அந்த வேலைப்பிடுங்கி கையில் எடுத்து—யானையை நோக்கிக் குறி பார்த்துக் கொண்டே வீரப் புன்னகை புரிகிறான் அவன்! ஆம், எதிரி தன் மீது எறிந்த வேலையே பறித்து எதிரிகளின் மீது வீசுகின்ற இத்தகைய வீரனை நமக்குக் காட்டுகிறார் வள்ளுவர்!

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய் வேல் பறியா நகும்!"

என்கிறார் பொய்யாமொழிப்புலவர்! இத்தகைய வீரப்பண்பில் ஊறிவளர்ந்தவர்கள்அல்லவா நாம்? இத்தகைய துணிவையும் வீரத்தையும் நுண்ணறிவையும் கொண்டுவாழ்ந்திருந்தவர் அல்லவா நம்முன்னோர்?

யுத்தமுனையிலே நிற்கின்ற வீரன் ஒருவன், எங்கோ ஓர் இடத்தில் எப்படியோ தன் சேனைக்கு ஏற்பட்டுவிட்ட ஒரு சிறு தோல்வியைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு அயர்ந்து நிற்பானாயின், அவன் மேலும் பல தோல்விகளையே சந்திக்க நேரிடும்! போர்முனையில் மேலும் முன்னேறிச் சென்றுகொண்டே இழந்துபோன வெற்றிவாய்ப்பை மீண்டும் ஈடுசெய்வதற்கான வழிவகைகளைப் பற்றி சிந்திப்பவன்தான் முழுப்போரிலும் வெற்றியீட்டமுடியும்!

ஈழத்தமிழ் சமுதாயத்தின் பூரண விடுதலைக்காகப் போராடி வருபவர்கள் நாம்! நீண்டதொரு புனிதமான தியாக வரலாறு நம்முடையது! நம்முடைய இயக்கத்தின் வரலாற்றில் எத்தனையோ புயல்களை — பூகம்பங்களை — சிறைவாழ்வை — சித்திரவதைகளையெல்லாம் சந்தித்ததுண்டு — இன்றைக்கும் சந்தித்துவருபவர்கள் நம் இயக்கத்தவர்கள். தமிழ் ஈழத்தின் விடுதலையென்ற உன்னதமான குறிக்கோளை முன்வைத்து, நாம் நடத்திவருகின்ற புனிதப் போராட்டத்திலே தேர்தல்களையும் பாராளுமன்றத்தையும், நம் இலட்சியத்தை எடுத்துச்சொல்கின்ற பிரசார மேடையாகப் பயன்படுத்திவருகிறோமே தவிர தேர்தல்களும், பாராளுமன்றப்பதவிகளும் தான் நம் இயக்கத்தின் முடிந்த — இறுதியான—இலட்சியமல்ல!

இந்த உண்மை தெளிவும், இலட்சிய உறுதியும் உள்ளவர்கள் மன்னார் இடைத்தேர்தல முடிவையிட்டு அதிகம் சிந்தை கலங்கிடத் தேவையில்லை!

ஆனாலும்...என்று நீ சற்று இழுக்கிறாய்! உண்மைதான் நண்பா, மன்னார் இடைத்தேர்தலில் இயக்கத்துக்கு வெற்றிவாய்ப்பை ஈட்டிக்கொடுத்திடும் நோக்குடன் நம்முடைய வவுனியா சிங்கம் — நடமாடும் — இன்றைய பண்டாரவன்னியன்—செல்லத்தம்பு தலைமையிலே தொண்டர்களும், தலைவர்களும் ஓய்வு ஒழிச்சலின்றி— உணவு உறக்கமுமின்றி—இரவு பகல் என்று பேதமின்றி ஓடாக உழைத்தார்கள்! நம்முடைய இளைஞர்கள் மிகவும் உணர்ச்சியுடனும் தீவிரமாகவும் பணியாற்றினார்கள்! அப்படியிருந்தும், எப்படியோ, மன்னார்த்தொகுதி சிங்கள மாயைக்குள் சிக்கிவிட்டது உள்ளபடியே வேதனையைத் தந்திடுவது தான்!

எனினும் ஒன்று நண்பா — இடைத்தேர்தலில் நாம் வெற்றிவாய்ப்பை அற்ப வாக்குகளால் இழந்திருப்பினும்—இடைத் தேர்தலின் போது நடத்தப்பட்ட தீவிர பிரச்சாரத்தின் பயனாக — மன்னார் தொகுதியின் மூலைமுடுக்கெங்கும், பட்டிதொட்டிகள் எங்கும் — இன விடுதலை உணர்ச்சி ஊட்டப்பட்டிருக்கிறது; இயக்கக் கருத்துக்கள் தூவப்பட்டிருக்கின்றன; புதிய கிளைகள்—பாடி வீடுகள்—தொடங்கப்பட்டிருக்கின்றன; இயக்கத்தைப்பொறுத்த அளவில் இது மிகப் பெரிய இலாபம்தான்!

இதையெல்லாம்விட அரசியல் அரங்கில் பல்வேறு உண்மைகளை தமிழ்மக்கள் அறிந்து கொள்ளவும் இப்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆம், தீமையிலும் ஒரு நன்மை உண்டு அல்லவா?

நண்பா, மன்னாரில் தமிழரசுக்கட்சி வெற்றிவாய்ப்பிழந்ததையிட்டு— ஐ.தே.கட்சி வெற்றிபெற்றதையிட்டு —யார் யாரெல்லாம் வரவேற்புப் பாடுகிறார்கள்; வாழ்த்துரை வழங்கினார்கள் என்பதைக் கவனித்தனையா?

ஐ. தே. கட்சியை தேச விரோதக் கட்சியென்றும், முதலாளித்துவக்கட்சியென்றும் தென்னிலங்கையில் மேடைதோறும் வைது தீர்த்துவருபவர்கள் — வசைமாரி பொழிந்து தள்ளுபவர்கள்—தங்களை 'சோசலிசவாதிகள்' என்று அழைத்துக்கொள்பவர்கள்— இவர்கள் எல்லாம் மன்னார்த்தொகுயில் ஐ. தே. கட்சி வெற்றிபெற்றதை வரவேற்று அறிக்கை விடுகிறார்கள்!

ஆம், எந்த ஐ. தே. கட்சியை பிற்போக்கு வாதிகளின் கூடாரமென்றும் தேச விரோத சக்தியென்றும், முதலாளித்துவ முகாம் என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் தெற்கே கூறிவருகிறார்களோ— அதே 'பிற்போக்கு, முதலாளித்துவ, தேச விரோதக் கட்சி'யான ஐ. தே. கட்சி, மன்னார்த்தொகுதியில் வெற்றி பெற்றதும், அந்த வெற்றியை வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர்!

இதனைத்தான் தமிழ் மக்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும்—தமிழ் சமுதாயத்தின் சுதந்திர உணர்வை — உரிமையுணர்வை - விடுதலைவேட்கையை — அமுக்கி விடுவதில்— நசுக்கி விடுவதில்— சிங்கள முதலாளித்துவத்துடன் சிங்கள சோசலிசம் கைகோத்து விடுகிறது; தமிழினத்தின் விடுதலை சிந்தனைகளை தரை மட்டமாக்குவதற்கு எப்படிப்பட்ட கடைந்தெடுக்கப்பட்ட — பிற்போக்குவாத முதலாளித்துவ சக்தி பயன் பட்டாலும், அதை இருகரம் நீட்டி வாரி அணைத்திடத் தயாராக இருக்கின்றனர் சிங்கள சோஷலிச வாதிகள்! இந்த உண்மையை தமிழ் சமுதாயம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்!

நண்பா, ஆமை ஆயிரம் முட்டையிட்டு விட்டு அமைதியாக இருந்திடும்; கோழி ஒரு முட்டை இட்டு விட்டு கொக்கரித்துத் திரிந்திடும்; என்று கூறுவார்கள்! ஆமையின் உதாரணம் ஐ. தே. க. வுக்கு பொருந்துகின்றதோ இல்லையோ — ஒரு முட்டை கூட இடாத அரசியல் கோழிகள் இப்போது கொக்கரித்துத் திரிந்திடும் அதிசயத்தை — அற்பத்தனத்தை இங்கு தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

மன்னார் இடைத்தேர்தலில் எழுபத்தைந்து மேலதிக வாக்குகளால் வெற்றி வாய்ப்பைப் பெற்ற ஐ. தே. கட்சியின் தலைவர் ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்கள், தேர்தல் முடிவு குறித்து வெளியிட்ட அறிக்கையில் — மன்னாரில் தாம் அரசுக்கு எதிராகவே பிரசாரம் செய்ததாகவும் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு, மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள ஏனைய பழுக்கள் ஆகியவற்றை எதிர்த்தே தமது கட்சி பிரசாரம் செய்ததாகவும் எனவே இன்றைய அரசாங்கத்தை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதே தேர்தல் முடிவு கூறுகின்ற விளக்கம் என்றும் திட்டவட்டமாகக் கூறியிருப்பது மாத்திரமல்ல —

"தமிழரசுக்கட்சியின் மொழிக்கொள்கையும் ஏனைய கொள்கைகளும் வேறு விஷயங்கள்"

என்றும் தெரிவித்திருக்கிறார்!

எதிர்க்கட்சித்தலைவரின்-அதாவது வெற்றி பெற்ற ஐ. தே. கட்சித்தலைவரின் இக் கூற்றுப்படி மன்னாரில் மக்களால் நிராகரிக்கப்பட்டது தமிழரசுக்கட்சியும், அதன் கொள்கைகளுமல்ல; அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பைக் காட்டுமுகமாகவே மக்கள் ஐ. தே. க. வுக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனவே அங்கு இன்றைய அரசாங்கத்துக்கே மரண அடிவிழுந்திருக்கிறது.

இப்போது அரசாங்கத்துக்கு விரோதமானதும் ஐ. தே. கட்சி செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருவதுமான குணசேன நிறுவனத்தினரின் ஆங்கில நாளேடான 'சன்' (1—3—73) இதழ் ஆசிரியத் தலையங்கத்தில் —

"However that the Federal Party candidate scored a close hit with 12,899 points to the fact that even on empty stomachs, language is still a predominating factor in Tamil areas"

"தமிழரசுவேட்பாளர் 12899 வாக்குகள் பெற்று நெருங்கிய அடி கொடுத்திருப்பது — தமிழ் பிரதேசங்களைப் பொறுத்த வரையில், பசித்த வயிறுகளிலும் கூட மொழியே முக்கிய அம்சமாக இருக்கின்றது என்ற உண்மையை எடுத்துக்காட்டி விட்டது"

— என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது!

## அரசியல் மேடை

ஆனல் — மன்னார் இடைத்தேர்தல் களத்துக்கே வர அஞ்சி ஒடிப்பதுங்கிய சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர்—போர்க்களத்தில் பிணந்தின்ன காத்திருக்கும் கழுகுகள் போல் பதுங்கியிருந்துவிட்டு—தேர்தல் முடிந்தவுடன் 'விமர்சிக்க' தொடங்கியிருக்கிறார்கள்; வாயில் வந்தபடி பிதற்றத் தொடங்கியிருக்கிறார்கள்!

1970 பொதுத்தேர்தலில் மன்னார்த் தொகுதியில் போட்டியிட்டு ஆக 513 வாக்குகள் மட்டுமே பெற்று கட்டுக்காசையே பறிகொடுத்த சிறீலங்கா சுதந்திரக்கட்சியினர் இப்போது கதையளக்கிறார்கள்! கொப்பேகடுவ குமாரசூரியர் துரையப்பா, தியாகராசா, போன்றோரெல்லாம் மன்னாரில் அரசுக்கு எதிராக மக்கள் காட்டிய வெறுப்புணர்ச்சியை பூசிமெழுகித்திசைதிருப்பிடும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மன்னார் இடைத்தேர்தலில் ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிட்டிருந்தால், என்ன நடைபெற்றிருக்கும் என்பதை — சுயேச்சையாகப் போட்டியிட்ட அக்கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருக்கு கிடைத்த வாக்குகள் தெளிவாகப் பறைசாற்றுகின்றனவே! அதுவும் சென்ற தடவை 513 வாக்குகள் பெற்ற அவருக்கு இந்த முறை ஆக 469! அதிலும் 44 வாக்குகள் குறைவு! இந்த நிலையில் கொஞ்சம் கூட வெட்கம், ரோசம், மானம் இன்றி—தமிழர் கூட்டணியைச் சாடப்புறப்பட்டிருக்கிறார்கள் நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் அற்ற அரசியல் கோழைகள்!!

ஈழத்தமிழர் தந்தை பெரியவர் செல்வாவின் சவாலை ஏற்று — காங்கேசன் துறை இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு அஞ்சி, தேர்தலையே கடந்த 15 திங்களாக நடத்தாமல் நொண்டிச்சாட்டுக்கள் பல கூறி, சனநாயகத்தை கொன்றொழித்து வருபவர்களான ஆளுங்கட்சியினர் — மன்னார் தமிழ் மக்கள் முன்பு செல்வதற்கு அஞ்சி கோழைத்தனமாக முக்காடு போட்டு மூலைக்குள் பதுங்கியிருந்து விட்டு, இப்போது முகாரி பாடுகின்றனர் வெட்கமின்றி! யூ. என். பி யை தேசியக்கட்சியென்று அரவணைத்திடுகின்றனர்!

சுதந்திரக்கட்சியின் தீவிர பிரசாரத்தின் விளைவே ஐ. தே. க.வின் வெற்றியென்றும், ஐ. தே. க. ஒரு ''தேசிய''க் கட்சியென்றும் புகழ்மாலை சூடியிருக்கிறார் குமாரசூரியர்!! தமிழர்கள் இனிமேல் தேசியக்கட்சியொன்றையே ஆதரிப்பார்களாம்!! குமாரசூரியர் கூக்குரல் இடுகிறார்!!

ஒரு விலை மாதுக்கு இன்னோர் விலைமாது — இவளன்றோ கற்புக்கரசி என்று புகழ்மாலை சூட்டிடுவதுபோல — சிங்களம் மட்டும்—பௌத்தம் மட்டும் என்கிற குறுகிய வேலிகளைக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தாசானுதாசர் — அதே போன்ற

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் கூட்டணி கூறியவற்றை மன்னாரில் ஐ. தே. கட்சி ஏற்றது!

## இடைத்தேர்தல் முடிவு குறித்து ஒருநோக்கு!

மன்னார் இடைத் தேர்தல் முடிவு தமிழ் தலைவர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளது; மேற்படி முடிவு அரசாங்கத்திற்கு எதிரான தீர்ப்பு என்பதில் துளியளவும் சந்தேகம் இடையாது. அத்துடன் புதிய அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுள்ளார்களா என்பதை வெளிப்படுத்தும் வகையில் அரசாங்கம் தனது வேட்பாளரை நியமிக்கவில்லை.

மேலும் 1970 பொதுத் தேர்தலில் அரசாங்கக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு 513 வாக்குகளைப் பெற்ற திரு. எஸ். ஏ. காதர் அவர்கள் (இவர் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும் கூட) இம்முறை சுயேச்சையாக தனது அதிகார வர்க்கத்தின் செல்வாக்கையும் பயன் படுத்தி போட்டியிட்டு கூட 469 வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளார்.

இதிலிருந்து ஆளுங்கட்சியினர் என்ன சமாதானம் கூறினாலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி தமிழ் மக்களிடையே செல்லாக் காசாக்கப் பட்டுள்ளதை தேர்தல் முடிவு ஐயம் திரிபற எடுத்துக் காட்டியுள்ளது. எனவே புதிய அரசமைப்புத் திட்டத்தை தமிழ் மக்கள் அங்கிகரித்துள்ளனர் என்பது முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க முயற்சிக்கும் சயலாகும்:

### தமிழர் கூட்டணி முன் வைத்த பிரச்சினைகள்

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு தன்மானப் பிரச்சினையா அல்லது வாழ்க்கைப் பிரச்சினையா முக்கியம் என்பதற்கிடையில் நீண்டகாலமாக கருத்து வேறுபாடு இருந்தாலும் தன்மானப் பிரச்சினையே ஜீவாதாரப் பிரச்சினை என்பதை தமிழர் கூட்டணி உதயமான நாள் முதல் பெரும்பாலும் சகல மக்களும் குறிப்பாக தமிழ் மக்களும் யதார்த்தரீதியாக ஏற்றுக் கொண்டுள்ளனர்: அப்படியாயின் மன்னார் தேர்தல் முடிவில் வாழ்க்கைப் பிரச்சினை எப்படி முதலிடம் பெற்றதென்ற கேள்வி எழுகிறது:

இதற்கு தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகக் கணிக்கப்படும் தமிழர் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியினர் மன்னார் மக்கள் முன் வைத்த முக்கிய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்:

(1) புதிய அரசமைப்புச் சட்டம் தமிழ் மக்களுக்கும் பாதகமானது:

(2) காங்கேசன் துறை இடைத்தேர்தலை வைக்காமல் அரசாங்கம் தமிழ் மக்களைப் பழிவாங்குகிறது.

(3) தமிழ் இளைஞர்கள் விசாரணையின்றி நீண்டகாலமாகச் சிறையில் வைக்கப் பட்டுள்ளார்கள்.

**இ: விக்கினராசா**
(சட்டமாணவன்)

(4) நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று (ஜனவரி 10) யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து 7 பேர் மரணமான பரிதாபச் சம்பவத்தையிட்டு அரசாங்கம் பாரா முகமாக இருந்தமை.

### ஐ. தே. க. நிலை

மேற் குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஐ. தே. க. நிலையென்ன?

புதிய அரசமைப்புச் சட்டம் ஜனநாயக அடிப்படை உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டதென இதுகாலவரை கூறிவந்த ஐ. தே. க. மன்னார் இடைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஒரு படி மேலேசென்று புதிய அரசமைப்புச் சட்டம் சிறுபான்மை மக்களுக்குப் பாதகமாக இருப்பதனால் சகல இன, மதமொழி அடிப்படை உரிமைகளையும் உள்ளடக்கிய பாரபட்சமற்ற புதிய அரசமைப்புத் சட்டத்தை ஐ. தே. க. பதவிக்கு வந்தால் அமுலாக்கு மென அடித்துக் கூறியது. இது தமிழ்ப் பேசும் மக்களுக்கும் குறிப்பாக தமிழர் கூட்டணிக்குக் கிடைத்த தார்மீக வெற்றியென்றால் அது மிகையாகாது. எனினும் ஐ. தே. க. பதவிக்கு வந்தால் இந்த வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்பது வேறொரு கேள்வி.

காங்கேசன் துறை இடைத் தேர்தலை உடனடியாக வைக்க வேண்டுமெனதேசிய அரசுப் பேரவைக்கு உள்ளும் வெளியும் ஐ. தே. க. குரலெழுப்பியுள்ளதாகவும், தொடர்ந்தும் அதை வற்புறுத்தி வரும் என உறுதியளித்தது.

ஐ. தே. கட்சியின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன காரணமின்றி நீண்ட காலமாகச் சிறையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று நடந்த அசம்பாவித சம்பவங்களுக்கு காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க விரைவில் ஆவன செய்வதாகவும் ஐ. தே. க. வாக்குறுதி அளித்திருந்தது.

எனவே, தமிழரசுக் கட்சியினர் முன் வைத்த முக்கிய பிரச்சனைகள் அனைத்திற்கும் பரிகாரம் காண பூரண சங்கற்பம் கொண்டுள்ளதாக ஐ. தே. க. உறுதியளித்தமையாலும், ஸ்திரமான மக்களின் இன்னல்களைக் குறைக்க வல்ல ஆட்சி ஒன்றை அமைக்க வல்ல ஒரு கட்சியாக ஐ. தே. க. தன்னைக் காட்டிக் கொண்டமையாலும் மன்னார் மக்கள் ஐ. தே. கட்சியையே நாடினர். இருந்த பொழுதும்போட்டி கடுமையாக இருந்தது தான் முடிவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

அதாவது. தமிழ் மக்களுக்கு தன்மானப் பிரச்சனையா அல்லது வாழ்க்கைப் பிரச்சனையா முக்கியமானது என்பதற்கிடையில் நடந்த சமரையே இது பிரதி பலிக்கிறது இதற்கு எப்படி வியாக்கியானம் கொடுக்கப் படினும் தன்மான முள்ள தமிழ் மக்கள் மொழியுரிமை முதல் சகல ஜீவாதார உரிமைகளையும் வென்றெடுப்பதையே தன்மானப் பிரச்சனையாகக் கொண்டு அதைத் தலையாய முதற் பிரச்சினையாக முடிவு செய்திருப்பினும் வெற்றி வாய்ப்பை இழக்க வேண்டியதற்கு இடித்துக் கூற வேண்டிய காரணமும் இருக்கத்தான் செய்கிறது.

அதாவது, ஈழம் வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் ஜீவாதார உரிமைகளைவென்றெடுக்க தமிழ்த் தலைவர்கள் மேற்கொள்ளும் போராட்ட நடவடிக்கைகளில் காணப்படும் மந்த நிலையே காரணம் விடுதலைத் துடிப்புள்ள பல ஆயிரக்கணக்கானோர் மனதில் குறிப்பாக வாலிபர்கள் மதியில் இதனால் ஏற்பட்டுள்ள மனக் குமுறலையும் விரக்தி மனப்பான்மையையும் எவரும் மறுக்க முடியாது: எனவே, ஐ. தே. க. வெற்றி தமிழ்த் தலைவர்களை விழிப்படையச் செய்திருக்கும் என தமிழ்ப் பேசும் மக்களும், குறிப்பாக வாலிபர்களும் முழு நம்பிக்கையுடன் எதிர் பார்க்கிறார்கள்:

தலைவர்களின் மீதுள்ள நம்பிக்கையையும், அபிமானத்தையும் மன்னார் மக்கள் மறக்கவோ, நிராகரிக்கவோ இல்லை யென்பதை கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 2,202 மேலதிகமான வாக்குகளை தமிழரசுக் கட்சி அபேட்சகர் பெற்றுள்ளது ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் போராட்ட நடவடிக்கைகளில் காணப்படும் மந்த நிலையினால் ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையும், குமுறலுமே தமிழ் மக்கள் எதிர்பார்த்தமைக்கு மாறாக மன்னார் தேர்தல் முடிவு அமைந்தமைக்குக் காரணமென துணிந்து கூறலாம்.

எனவே, தமிழ் மக்களின் மொழியுரிமை முதல் சகல ஜீவாதார உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான விடுதலைப் போராட்டத்திற்கு புதிய வேகம் கொடுத்து துரிதப்படுத்துவதற்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே மன்னார் தேர்தலின் பிரதிபலிப்பாகும்.

இன்னுமொரு உண்மையையும் இறுதியில் வலியுறுத்த வேண்டியுள்ளது. தமிழர் கூட்டணியில், தமிழரசுக்கட்சியில் அனுதாபமுள்ள பலரும் கூட ஐ. தே. க. வுக்கு வாக்களித்ததால் தாம் பெருங் கெடுதியான செயலில் ஈடுபட்டமைக்காக இரத்தக் கண்ணீர் சொரியும் நாள் அதிக தூரத்தில் இல்லை!

---

## ரகசியம்

பூநகர் மரியதாஸ்

உலகறியா பெரு ரகசியம்......
தேவதூதன் யேசுவுக்கு—
சிலுவைமரம்——!
சமுதாய நச்சுப் போர்வை களைந்த
சோக்ரடீசுக்கு நஞ்சு—பெரும் புதல்வன்,
காந்திக்கு அவனினத்தவன் கைகளினாலோ
துப்பாக்கிக் குண்டு............
ஏனோ———?
இவைகளைத் தாம்—இவ்வுலக
உன்னதர்கள்,...இவர்கள்
தம்பரிசுகளாக ஏற்றனரோ—!
எம்மிடையையும் ஓர் தியாகி
அவனுக் கென்ன பரிசு
நீவிர் அறிவீர்—எம்மிடையே!
தியாகிகள் பல பேர்......ஓ...
சத்திய சீலர்கள்——இல்லாமை
நம் அடிமைத் தழையின்——,
எம் விடுதலைப் போரின் தயக்கம்—
இதுவே——
பெரு ரகசியம்

●

## ஏன் தயங்குகின்றாய்?

மட்டுநகர் — அன்புலிங்கம்

"நீயொரு தமிழன் என்றால்.
நீதியெங் கொழித்து வைத்தாய்?
நேர்மையுன் மூச்சு என்றால்!
நேரத்தையேன்! கடத்துகின்றாய்?

வீரருன் முன்னோ ரென்றால்!
வெந்து ஏன்! விம்முகின்றாய்?
போரை நீ! கண்டதென்றால்!
புறப்பட ஏன் தயங்குகின்றாய்?

காரிருள்! சூழும் ஒன்றால்!
கண்களை யேன்! மூடுகின்றாய்?
வேரினுள் நோய் புகுந்தால்!
வேலி யேன்! போடுகின்றாய்

மார்பினில் வீரம் என்றால்!
மந்திரம் ஏன் தேடுகின்றாய்?
போரினில் நீதி என்றால்!
"புறப்பட ஏன்! தயங்குகின்றாய்""?

●

## புதுக்கவிதை

— இலக்கியச் சித்தன்.

உணர்ந்து
மகிழ்ந்து
நினைந்து —
உணர
மகிழ
நினைக்க —
மனப் பரப்பு
மனம் பரப்ப —
உழுது, புதுக்க விதை!
எழுது, புதுக் கவிதை!

## தமிழுணர்வு சாகவில்லை!

— செ. குணரத்தினம்—

எனது வீட்டில் அடுப்பெரிந்து
இன்றோடு எத்தனை நாட்கள்
என்பதே எனக்கு ஞாபகமில்லை:
மனைவியும் பிள்ளைகளும்
என்னை நம்பி
கண்ணீர் வடித்து
கதறியழுகிறார்கள்!
மூத்த மகனும், மகளும்
எஸ். எஸ். சி. படித்தவர்கள்.
எத்தனையோ வேலைக்கு
மனுப்பண்ணி
ஏறாத படிகளெல்லாம் ஏறி,
இறங்கி விட்டார்கள்.
இன்னும் எங்கள் பக்கம்
வசந்தம் வரவில்லை:
மனைவிக்கு —
மாறாத இருமல் வருத்தம்.
எனக்கோ தலை நரைத்து
கண்கள் புகைந்து,
உடம்பு மெலிந்து,
நடை தளர்ந்து போய்விட்டது.
வாழ்க்கையை
வெறுத்த நிலையில் வாழ்கிறோம்.
என்றாலும் ——
என் தமிழ் மொழிக்கு
ஏது மென்றால் ............
எங்கள் வருத்தமும், கவலைகளும்
எங்கோ போய் மறைகின்றன
போருக்குப் போகின்ற
வீரத்தை, தைரியத்தை
தமிழன்னை எங்களுக்கு
தருகின்றாள்.
தமிழ்ப்பற்றும், உணர்ச்சியும்
இன்னும் சாக வில்லை
நாங்கள் அசல் தமிழர்கள்!

●

## 'வாழ்வு'

— "கடுகு" —

இனத்திற் குற்ற
ஈன நிலை மறந்து
மொழிக் கேற்பட்ட
இழிவு நிலை மறந்து
பதவிப் பெரும்பித்தால்
பற்றிய கொள்கையினை
காற்றில் பறக்க விட்டு
கால் வயிற்றுக் கஞ்சிக்காய்
காக்கை வன்னியன் போல்
காசினியில் நான் வாழேன்!

---

## தென்னகக்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பக் காய் கவரக்கூடாது என்பது ஈழத்துக் கவிதைகளுக்கு மட்டுந்தான் பொருத்தமா? தமிழகக் கவிதைகளுக்குப் பொருத்தமில்லையா? வேண்டுமென்றே தமிழகக் கவிஞர்களை மட்டந்தட்டிய காரணம், அவர்கள் மீது முருகையன் கொண்டுள்ள எரிச்சலா?

'நானுந்தான் எவ்வளவோ கவிதைகளை எழுதியிருக்கிறேன், என்னைத் தமிழ்நாடு இன்னும் ஒரு கவிஞனாக மதித்து எனக்குப் போதிய விளம்பரம் தருவதில்லையே' என்ற ஏக்கமா? தமிழ் நாடு சம்பந்தமான எதையும் மட்டந்தட்டினால் தான், இங்குள்ள அதிகாரிகளிடமும், சில அறிஞர்களிடமும் 'நல்ல பிள்ளை'ப்பட்டம் பெறலாம் என்ற எண்ணத்தினாலா? நல்லவர்களையும் பெரியவர்களையும் கண்டபடி திட்டுவதுதான் பிரபலமடைவதற்கான ஒரேவழி என்ற 'தமிழ்வாணன் தத்துவத்தைப்' பற்றிப் பிடித்ததன் பயனா?

முருகையன் அல்லது அவருடன் இயக்கரீதியாக இணைந்தவர்கள் என் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முன் வருவர் என்றே நம்புகின்றேன்.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**632-வது நாள்**

4 வது திகிலூட்டும் வாரம்!

# சென்ட்ரல்

(மருதானை) 2, 6, 9.30
(ஞாயிறு காலை 10 மணிக்கு)

ராணி (யாழ்ப்பாணம்) 10,30, 2.30, 6.30, 9.30



சிறந்த இசையமைப்பு சங்கீதம் நகைச்சுவை கலந்த தேன்போல் இனிக்கும் திரையோவியம்!

முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற நகைச்சுவைச் சித்திரம்

நாகேஷ் — விஜயலலிதா
எம். ஆர். ஆர். வாசு
— நடித்த —

# தேன் கிண்ணம்

( பாஸ்கள் ரத்து )

## சட்டமறுப்பு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமாக நிறுவப்பட்ட திருமுருகன் தமிழ்ப் பாடசாலையில் படித்து வந்த பிள்ளைகளை, தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட வேறு அரசாங்கப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கு இப்போது கல்வித் திணைக்களம் அனுமதியளித்துள்ளது.

இதன் காரணமாக தாய் மொழியே ஒரு பிள்ளையின் போதனாமொழியாக இருக்க வேண்டும் எனும் உரிமையை நிலைநாட்டும்நோக்கத்துடன் தமிழர்கூட்டணி ஓராண்டாக நடத்தி வந்த சட்ட மறுப்பு இயக்கம் வெற்றி பெற்றுவிட்டது.

புத்தூரில் உள்ள பௌத்த பாடசாலையில் ஆரம்பத்திலிருந்து தமிழே போதனா மொழியாக இருந்து வந்தது 1973ம் ஆண்டு சனவரி திங்களில், இப்பாடசாலையின் போதனாமொழியாக சிங்களத்தை திணிக்கும் உத்தரவை கல்வித் திணைக்களம் இரவோடிரவாகப் பிறப்பித்தது;

பௌத்த பாடசாலையில் சிங்களத்தைப் பாடமொழியாக திணித்ததுடன், சிங்களத்தை போதனாமொழியாக ஏற்க மறுத்துப், அ பாடசாலையிலிருந்து வெளியேறும் தமிழ் மாணவர்களை புத்தூர் பகுதியிலுள்ள தமிழைப் போதனாமொழியாகக் கொண்ட வேறுபாடசாலைகளிலும் சேர்க்கக் கூடாதென்று கல்வித்திணைக்களம் அப்போது உத்தரவிட்டிருந்தது?

தாய் மொழியில் கல்வி பெறும் உரிமையைப் பூண்டோடு அழித்து, தமிழ்ப் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தை வலிந்து திணித்திடும் கல்வியமைச்சின் இவ்வின ஒழிப்புக் கொள்கையை எதிர்த்து, நீதியைப் பெறும் நோக்குடனும் சிங்கள அரசின் மனச்சாட்சிக்கு சவால் விடுத்தும் தமிழர் கூட்டணி சட்ட மறுப்பு இயக்கத்தில் குதித்தது!

கல்விச்சட்டத்தை மீறி திருமுருகன் தமிழ்ப்பாடசாலை யென்ற பெயரில் புதிய பாடசாலையை தமிழர் கூட்டணி புத்தூரில் 1973 ஏப்ரல் 6ம் நாள் நிறுவியது; தமிழைப் போதனாமொழியாகக் கொண்ட இச் சட்ட மறுப்புப் பாடசாலையின் முகாமையாளர்களாக திருவாளர்கள் தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், வி. தர்மலிங்கம் பா. உ. த. ஆனந்தன் ஆகியோர் இயங்கினர்.

# 66 வது நாள்

கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா,
பாலாஜி, மனோகர், நாகேஷ்,
சச்சு, எம். ஆர். ஆர். வாசு நடித்த




எமது அடுத்த வெளியீடு
கிங்ஸ்லி பிளாசா லிடோ (யாழ்நகர்) திரைகளில்

முத்துராமன் - ஜெயலலிதா
சாவித்திரி சுந்தரராஜன் —நடித்த— சூரியகாந்தி

காட்சி அளிக்கிறது செல்ல மகால்

வி. எஸ் தி பிலிம்ஸ் வெளியீடு



கே. ஆர். விஜயா

நாகேஷ்

சுந்தரராஜன் — விஜயலலிதா நடித்த

# கல்யாண ஊர்வலம்

கெயிட்டி காட்சியளிக்கிறது

# ஜக்கம்மா



தமிழில் வெளிவரும் முதல் கௌபோய் திரை விருந்து

ஜெய்சங்கர் - சாவித்திரி
உஷா S. V. சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
மனோரமா

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1974ம் வருடம் மார்ச் மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.